# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 29 சனிக்கிழமை (12-04-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:137


# ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவரை புலிகளிடம் 'உதயன்' ஊழியர் காட்டிக் கொடுத்தாராம்!

## செய்தியாளர் மாநாட்டில் அக்கட்சி பகிரங்கக் குற்றச்சாட்டு

கொழும்பு,ஏப்.12

ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவரை விடுதலைப் புலிகளிடம் உதயன் ஊழியர் ஒருவர் காட்டிக்கொடுத்தார் என ஈ.பி.டி.பி. குற்றஞ்சுமத்தியுள்ளது.

இவ்வாறு காட்டிக்கொடுக்கப்பட்டு, புலிகளினால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்தவர் இப்போது தப்பிவந்திருக்கிறார் எனத் தெரிவித்து, ஒரு நபரையும் ஈ.பி.டி.பி. ஆஜர்செய்தது.

கொழும்பில் ஹோட்டல் நிப்போவில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றிலேயே தமது உறுப்பினரெனத் தெரிவித்து பரமன் என்பவரை ஈ.பி.டி.பி. ஆஜர்செய்தது.

புலிகளின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வேளையில், புளொட் அமைப்பின் உறுப்பினர் ஒருவரின் உதவியுடன் சிறைச்சாலை கூட்டை உடைத்துத் தப்பினோம் என்று அவர் அச்செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 31 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து வன்னியில் உள்ள எனது சகோதரியைப் பார்ப்பதற்காகச் சென்றேன். கிளிநொச்சி பஸ் நிலையத்தில் வைத்து 'உதயன்' பத்திரிகையில் கடமையாற்றும் சந்திரன் என்பவர் என்னைப் புலிகளின், புலனாய்வுப் பிரிவினரிடம் காட்டிக்கொடுத்தார். புலிகள் என்னைக் கைதுசெய்து வன்னியில் உள்ள தமது பாதாளச்சிறையில் தடுத்துவைத்தனர்.

புளொட் உறுப்பினர் ஒருவரின் உதவியுடன் பூட்டை வாள் ஒன்றினால் அறுத்து அதன் ஊடாக அதிகாலை ஒரு மணியளவில் தப்பி வந்தேன். புளொட் உறுப்பினர் ஒருவர் கண்காணிப்புக்குழு அலுவலகத்துக்குச் செல்லும் பாதையையும் காண்பித்தார்.

சுமார் மூன்றரை மணிநேரம் நடந்து அதிகாலை நாலரை மணிக்கு கிளிநொச்சி கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்தில் சரண் அடைந்தேன். அவர்கள் பின்பு அழைத்துவந்து யாழ்ப்பாணத்தில் பொலீஸாரிடம் கையளித்தனர் - என்றார் அவர்.

தன்னைத் தடுத்து வைத்திருந்த பாதாளச் சிறையில் மாற்றுத் தமிழ்க் குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்களையும் நூற்றுக் கணக்கான படையினரையும் தடுத்து வைத்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்துகொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவதாசன், கடந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு-கிழக்கின் தேவை குறித்து அறிக்கை வெளியிட அரசு ஏற்பாடு

# யுத்தநிறுத்த மீறல்களை தவிர்க்கும் அரசின் திட்டம்

கொழும்பு,ஏப்.12

கடற் பிராந்தியத்தில் போர்நிறுத்த மீறல்களைத் தவிர்ப்பதற்கான சிபாரிசுகள் அடங்கிய திட்டம் ஒன்றினை அரசு தயாரித்துள்ளது.

இத் திட்டம் கண்காணிப்புக் குழு ஊடாக விரைவில் விடுதலைப் புலிகளிடம சமர்ப்பிக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பொனான்டோ தெரிவித்தார்.

கடற்பரப்பில் போர் நிறுத்த மீறல

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுமக்கள் கருத்து தெரிவிக்கச் சந்தர்ப்பம்

கொழும்பு,ஏப்ரல்12

**சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் தயாரிக்கப்பட்டுள்ள, வடக்கு - கிழக்கு அவசர தேவைகள் மதிப்பீட்டு அறிக்கை பகிரங்கமாக வெளியிடப்படும். அந்த அறிக்கை தொடர்பாக கருத்துத் தெரிவிக்க பொதுமக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.**

**இத்தகவலை அரச உயர் மட்ட அதிகாரி ஒருவர் வெளியிட்டார்.**

அரசப்பிரதிநிதிகளும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கும் அவசர மனிதாபிமான, புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான உபகுழு சர்வதேச சமூகத்தின் உதவியுடன் அவசர தேவைகள் தொடர்பாக மதிப்பீட்டு அறிக்கை ஒன்றைத்

(12 ஆம் பக்கம் பார்க்க)




இசை, நடன, நாடக விழாவில் விருதுபெற்ற கலைஞர்கள்.

# ஆறு மூத்த கலைஞர்களுக்கு தலைவர் பிரபா சார்பாக விருது

## திருமலை விழாவில் வழங்கப்பட்டது

திருகோணமலை,ஏப்.12

திருகோணமலையில் இடம்பெற்றுவரும் கலை பண்பாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டிலான இசை, நடன, நாடக விழாவின் நான்காம் நாளான நேற்று ஆறு மூத்த கலைஞர்கள், தலைவர் வே.பிரபாகரன் சார்பாக விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இசை மணி சங்கரலிங்கம் (இசைத்துறை), கலாபூஷணம் சித்தி அமரசிங்கம் (நாடகத்துறை), இராஜேஸ்வரி தெட்சணாமூர்த்தி (இசைத்துறை), நாட்டிய வித்தகி திருமதி சாரதா சிறிஸ்கந்தராசா (நாட்டியத்துறை), அண்ணாவியார் இராசையா தம்பிராசா (நாட்டுக்கூத்து), எஸ்.பத்மநாதன் (மெல்லிசை) ஆகிய ஆறு மூத்த கலைஞர்களே விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்கள் ஆவர்.

விருது வழங்கும் நிகழ்வைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (ஒ-3-290)

# சமாந்தரமாகப் பயணிப்போர் மீது 21 ஆம் திகதி முதல் கடும் நடவடிக்கை!

## நீதிவான்கள் - பொலீஸார் சந்திப்பில் முடிவு

யாழ்ப்பாணம்,ஏப்.12

குடாநாட்டில் போக்குவரத்து விதிகளை மீறுவோர், வீதியில் சைக்கிள் அல்லது மோட்டார் சைக்கிள்களில் சமாந்தரமாக செல்வோர் உடன் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவர்.

இந்த புதிய நடைமுறை எதிர்வரும் 21 ஆம் திகதி நடைமுறைக்கு கொண்டுவரப்படவிருக்கிறது.

யாழ்.நீதிமன்றத்தில் நேற்று முற்பகல் நடந்த நீதிவான்கள் - பொலீஸ் அதிகாரிகள் சந்திப்பில் இதுதொடர்பாக முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் பெருகிவரும் விபத்துக்களைத் தடுக்க எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டு புதிய நடைமுறைகள் முடிவு செய்யப்பட்டன.

அந்த நடைமுறைகள் வருமாறு:-

★ போக்குவரத்து விதிகளை மீறுபவர்கள் - வாகன அனுமதிப் பத்திரம், வரிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் ஆகியன இன்றி வாகனம் ஓட்டுதல், மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுதல், அதிவேகத்தில் வாகனம் ஓட்டுதல், விதிமுறைகளைக் கவனிக்காது அளவுக்கு அதிகமாக பயணிகளை வாகனத்தில் ஏற்றிச்செல்வது ஆகிய குற்றங்கள் தொடர்பாக போக்குவரத்துப் பொலீஸாரால் எதிர்காலத்தில் சம்பந்தப்பட்டவர்களை உடனடியாகக் கைதுசெய்து நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படவேண்டும்.

★ வீதிகளில் துவிச்சக்கர வண்டிகளிலோ மோட்டார் சைக்கிள்களிலோ சமாந்தரமாகப் பிரயாணம் செய்பவர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்படவேண்டும்.

இத் தீர்மானங்கள் தொடர்பாக பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தி எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் அவற்றை நடைமுறைப்படுத்துவதாக பொலீஸ் தரப்பினால் நீதிவான்களுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

(ஒ-3-5-10)

## வீரச்சாவடைந்த புலி உறுப்பினர்

கிளிநொச்சி,ஏப்.12

1997ஆம் ஆண்டு வீரச்சாவடைந்த போராளி ஒருவரின் பெயர் விவரங்களை புலிகளின் குரல் வானொலி நேற்றிரவு அறிவித்தது.

லெப்.கேணல் அப்பையா (ஐயாத்துரை இராசையா, மடத்தடி வீதி, மானிப்பாய், யாழ்ப்பாணம்) என்ற அப்புலி இயக்க உறுப்பினர் 99ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 24ஆம் திகதி அரசின கைக்கூலிகளால் மல்லாவியில் வைத்து கொலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

## ஜனாதிபதி நாடு திரும்பினார்

கொழும்பு,ஏப்,12

இந்தியாவுக்கு நான்கு நாள்கள் விஜயத்தை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று நாடு திரும்பினார்.

இந்தியாவுக்கு விஜயஞ்செய்த அவர், அங்கு இந்தியப் பிரதமர், ஜனாதிபதி, வெளிவிவகார அமைச்சர், துணைப் பிரதமர், முன்னாள் பிரதமர், தமிழக முதல்வர் மற்றும் படைத்தளபதி சதீஸ்நம்பியார் ஆகியோரை சந்தித்துக் கலந்துரையாடினார்.(ஒ-4)

## வடக்கு, கிழக்கு பிரதேசத்தில்

# சிறுவர் உரிமையைப் பாதுகாக்க 'யுனிசெவ்' தலைமையிலான குழு

கிளிநொச்சி,ஏப்.12

வடக்கு - கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் உரிமைகளைக் கண்காணிப்பதற்கு ஐநா.சிறுவர் பாதுகாப்பு நிதியத்தால் நிர்வகிக்கப்படும் கண்காணிப்புச் செயற்பாட்டு அமைப்பு பேணப்படும்.

கிளிநொச்சியில் கடந்த இரு தினங்கள் நடந்த சிறுவர் நலன் பேணும் பட்டறையின் முடிவில் வெளியிடப்பட்ட பிரகடனத்தில் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுனிசெப் அமைச்சின் இலங்கைக்கான பிரதிநிதி ரெட்ஹைறபன் தலைமையில் கடந்த இரண்டு நாள்களாக கிளிநொச்சியில் நடந்த இந்த செயலமர்வில் சிறுவர்களின் புனர்வாழ்வு தொடர்பான பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் அரசியல் குழு டென்மார்க்கை அடைந்தது

டென்மார்க்,ஏப்.12

வெளிநாடுகளில் நிலவும் சமஷ்டி ஆட்சிமுறை குறித்து ஆராய்வதற்காக வெளிநாட்டுச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் குழுவினர் டென்மார்க் சென்றடைந்தனர்.

அங்குள்ள அரசியல் அமைப்பு மற்றும் ஆட்சிமுறை குறித்து ஆராய்ந்துவரும் இவர்கள், நேற்று டென்மார்க் நாட்டின் பாதுகாப்பு

(12 ஆம் பக்கம் பார்க்க)

### பொதுமக்களுடன் நல்லுறவைக் கட்டாயம் பேண வேண்டும்:

# சட்டவிரோதிகளுடன் பொலீஸார் ஒருபோதும் ஒத்துழைக்கக்கூடாது!

## யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஏப்.12

பொலீஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே நல்லுறவு பேணப்பட வேண்டும் என்பது உண்மைதான். ஆனால், அதற்காக குற்றச்செயல்களில் ஈடுபடுவோருடனும் பொலீஸார் நல்லுறவைப் பேணவேண்டும் என்பதில்லை. சட்டத்தையும் ஒழுங்கையும் பேணும் பொதுமக்களுடன் மட்டுமே பொலீஸார நல்லுறவைப் பேண வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா.

குடாநாட்டில் நீதிமன்ற நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக நேற்று யாழ். நீதிமன்ற வளாகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மீது பொலீஸார் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அதை விடுத்து அவர்கள் கூறும் போலிக் காரணங்களை ஏற்றுக்கொள்ளக்கூடாது. குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்காத பொலீஸாரை இலங்கையின் ஜனநாயக அரசியல் அமைப்புக்கு முரணாகச் செயற்படுபவர்களாகவே நாம் கருதவேண்டியிருக்கும். பொது மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு குடாநாட்டில் சட்டமும் ஒழுங்கும் நிலை நாட்டப்படவேண்டும்.

குடாநாட்டில் தற்பொழுது குற்றச் செயல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. எனவே, சட்டத்தையும் ஒழுங்கையும் வலிமையாக நடைமுறைப் படுத்துவதில் பொலீஸார் தீவிரமாக ஈடுபடவேண்டும்.

பாலியல் வல்லுறவு மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் ஆகியவற்றுக்கு உள்ளான பெண்களிடமோ, சிறுமிகளிடமோ இருந்து முறைப்பாடுகளைப் பதிவு செய்யும் பணியில் பெண பொலீஸாரையே பயன்படுத்தவேண்டும். இத்தகைய முறைப்பாடுகளை பலர் முன்னிலையில் பதிவுசெய்யாது தனியான இடத்தில் அவர்களிடம் முறைப்பாடுகளைப் பதிவு செய்யவேண்டும். அவ்வாறு செய்தால்தான் அவர்கள் எவ்வித தயக்கமும் இன்றி தமது முறைப்பாடுகளைத் தெரிவிக்கமுடியும். இனிவரும் காலங்களிலாவது இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

- என்றார் நீதிவான்.

இக்கலந்துரையாடலில் மல்லாகம் நீதிவான் திருமதி சரோஜினிதேவி இளங்கோவன், ஊர்காவற்றுறை நீதிவான் பா.சுப்பிரமணியம், சாவகச்சேரி நீதிவான் க.அரியநாயகம் ஆகியோரும் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ஹெறால்ட் அன்ரனி, யாழ்மாவட்ட உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் விக்டர் தர்மஸ்ரீ, யாழ்.பொலீஸ் நிலைய உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் டிபிரே மரட்ண ஆகியோரும் ஏனைய பொலீஸ அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (ஒ-10)



யாழ்.மாவட்ட நீதி மன்றங்களின் நடவடிக்கைகளை மேலும் மேம்படுத்துவது குறித்து ஆராயும் கூட்டம் நேற்று யாழ்.நீதிமன்ற வளாகத்தில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் பிரதான பங்கேற்ற சாவகச்சேரி நீதிவான் க.அரியநாயகம், மல்லாகம் நீதிவான் திருமதி சரோஜினிதேவி இளங்கோவன், யாழ்ப்பாண நீதிவான் இ.த.விக்னராஜா, ஊர்காவற்றுறை நீதிவான் பா.சுப்பிரமணியம், யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ஹெறால்ட் அன்ரனி ஆகியோரையும், கூட்டத்தில் கலந்துகொண்ட பொலீஸ் அதிகாரிகளையும் படங்களில் காணலாம். *(படம்: வசந்தன்)*

## புதுவருடப் பிறப்பன்று வெய்யில் கொளுத்தும்

யாழ்ப்பாணம்,ஏப்.12

புதுவருடப்பிறப்பான நாளைமறுதினம் திங்கட்கிழமை சூரியன் யாழ். குடாநாட்டின் நடு உச்சியில் இருக்கும். எனவே, அன்றைய தினம் அதிகளவு வெப்பநிலை காணப்படும் என வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி வி.புஸ்பநாதன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இன்று 12ஆம் திகதி தொடக்கம் மே மாதம் வரை மாலை வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும் சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-180)

## சமாதானம் மிக்க சுபீட்சமான நாட்டை கட்டியெழுப்ப சேர்ந்து பணியாற்றுவோம்

### புத்தாண்டுச் செய்தியில் பிரதமர் அழைப்பு

சமாதானத்தை நிலைநாட்டி, செழிப்பான ஓர் இலங்கையைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்று சேர்ந்து செயலாற்ற மலரும் தமிழ், சிங்களப் புததாண்டில் திடசங்கற்பம் பூணுவோம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது புத்தாண்டுச் செய்தியில் அழைப்பு விடுத்திருக்கிறார்.

அதிர்ஷ்டமும் சௌபாக்கியமும் நிறைந்த புத்தாண்டாக மலரும் ஆண்டு அமையட்டும் என்று செய்தியில் வாழ்த்தியிருக்கும் பிரதமர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஒவ்வொருவருக்குமிடையே நல்லெண்ணத்தை வளர்த்துக் கொள்வதற்கும், சிதைந்து போன தொடர்புகளை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் புத்தாண்டு துணைபுரிகின்றது.

இந்நாட்டில் வாழும் சகல பிரஜைகளும் சம உரிமைகளுடனும், சமத்துவத்துடனும் வாழக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாக்குவதற்கும் மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதற்கும் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. நம் நாட்டில் பெரும்பாலான மக்கள் நாட்டில் சமாதானம் நிலைநாட்ட வேண்டும் என்ற நோக்கத்தில் உள்ளனர் என்பது திண்ணம். இவ்வாறு செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## சிறுமியைக் கடத்தி தவறான நடத்தைக்குட்படுத்திய நபர் கைது!

15 வயதுச் சிறுமி ஒருத்தியைக் கடத்திச்சென்று தவறான நடத்தைக்குப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் நபரொருவர் நேற்றுமுன்தினம் யாழ். பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குருநகர் மத்தியகிழக்கு வீதியைச் சேர்ந்த பிலிப் ஜோன்சன் (வயது 39) என்ற இந்த நபர் கடந்த சில நாள்களுக்கு முன்னர் குருநகரைச் சேர்ந்த மேற்படி சிறுமியை ஏமாற்றி அழைத்துச் சென்றதாகவும் -

ஆனைக்கோட்டை சாவற்கட்டு என்ற இடத்திலுள்ள வீடொன்றில் அவரை 3 நாள்கள் தடுத்துவைத்திருந்ததாகவும் -

இது குறித்து சிறுமியின் உறவினர்கள் யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலீஸார் ஆனைக்கோட்டைக்குச் சென்று இந்த நபரைக் கைதுசெய்து சிறுமியை மீட்டதாகவும் -

பொலீஸ் நிலையத்தில் தெரிவிக்கப்பட்டது.

மீட்கப்பட்ட சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் (ம-4-12)

## இசை, நடன, நாடக விழாவில் இன்று

திருகோணமலை,ஏப்.12

திருகோணமலையில் நடைபெற்று வரும் 'மானுடத்தின் தமிழ்க் கூடல் 11' இசை, நடன, நாடக விழாவில் இறுதிநாள் நிகழ்ச்சிகள் இன்று நடைபெறவுள்ளன.

இன்றைய நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் மங்கள விளக்கேற்றுவார். விழாச்சுடரை திருமலை நவம், வைத்திய கலாநிதி ஏபிரகாம், திருமதி சித்தி பத்மநாதன், ஆர்.சி.குணரத்தினம் ஆகியோர் ஏற்றுவர்.வரவேற்புரையை முத்து இராதாக்கிருஷ்ணன் நிகழ்த்துவார்.

தொடர்ந்து இசைமாணி தவநாதனின் பாட்டும், பேபி ஆசிரியையின் நெறியாழ்கையில் விடுதலைக் கலைஞர்களின் 'சங்க நாதம்' என்னும் நடன நிகழ்வு என்பன இடம்பெறும்.

இன்றைய நிகழ்வில் தலைமை உரையை கா.சிவபாலனும், சிறப்புரையை க.வேபாலகுமாரனும், நிறைவுரையை விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரையும் நிகழ்த்துவர்.

தொடர்ந்து சங்கீத பூஷணம் எஸ். பத்மலிங்கம் பாட்டு, தேவானந்தின் நெறிப்படுத்தலில் யாழ்பல்கலைக்கழக மாணவர்கள் வழங்கும் 'அக்கினிப் பெருமூச்சு', பிரபல தமிழக பின்னணிப் பாடகியும், தமிழிசைப் பாடகியுமான ரி.கே.கலா வழங்கும் சிறப்பு நிகழ்வும், தமிழீழ விடுதலை இசைக்குழுவின் 'தாயக ராகங்கள்' எழுச்சி கானமும் இடம்பெறும். (எ)

## திருமலையில் தொண்டர் ஆசிரியர்களின் உண்ணாவிரதம் தற்காலிக இடைநிறுத்தம்

வடக்கு - கிழக்கு மாகாணத் தொண்டர் ஆசிரியர்கள் மாகாணசபை கல்வியமைச்சின் எதிரே நடத்திவந்த சுழற்சி முறையிலான உண்ணாவிரதப போராட்டம் நேற்று தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்குவும் நடத்திய பேச்சுக்களில் தொண்டர் ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது எனவும், அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இரா.சம்பந்தன் எம்.பி.,மாகாணக் கல்விப்பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் சி.தண்டாயுதபாணி ஆகியோர் உண்ணாவிரதிகளை நேற்றுச் சந்தித்து இது தொடர்பாக வாக்குறுதி அளித்தனர் எனவும், அதனால் உண்ணாவிரதப் போராட்டத்தை தற்காலிகமாகக் கைவிட்டுள்ளதாகவும் தொண்டர் ஆசிரியர் ஒன்றியத்தின் இணைப்பாளர் எஸ்.சந்திரகுமார் தெரிவித்தார்.

குறிப்பிட்ட காலத்துக்குள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாத பட்சத்தில் மீண்டும் தமது போராட்டம் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## மட்டு. ரயில் சேவை இன்று ஆரம்பம்

கொழும்பு,ஏப்.12

மட்டக்களப்புக்கான ரயில் சேவை பல ஆண்டுகளின் பின்னர் மீண்டும் இன்று ஆரம்பமாகின்றது. இன்று காலை 6.15 மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து முதலாவது ரயில் புறப்படுமென ரயில்வே திணைக்கள உயர் அதிகாரியொருவர் நேற்றுத் தெரிவித்தார்.

மட்டக்களப்புக்கான தபால் ரயில் இன்று இரவு 8 மணிக்கு கொழும்புக் கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து புறப்படும். படிப்படியாக மட்டகளப்புக்கான ரயில் சேவைகள் நான்காக அதிகரிக்கப்படும்.

மட்டக்களப்பு ரயில் சேவை 1996 ஆம் ஆண்டில் ரயில் பாதையில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தை அடுத்து பொலன்னறுவையுடன் இடைநிறுத்தப்பட்டது. கடந்த ஆண்டு இந்தச சேவை வாழைச்சேனைவரை நீடிக்கப்பட்டது தெரிந்ததே.

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.12

தமிழீழ விளையாட்டுத் துறையின் ஏற்பாட்டில் சித்திரை வருடப்பிறப்பன்று மரதன் ஓட்டப்போட்டி நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் பங்குபற்றுவதற்கு விண்ணப்பித்த போட்டியாளர்களில் முல்லைத்தீவு மாவட்டப் போட்டியாளர்கள் மாங்குளத்திற்கும், கிளிநொச்சி மாவட்டப் போட்டியாளர்கள் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கும் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 5 மணிக்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

14ஆம் திகதி காலை 6 மணிக்குப் போட்டி ஆரம்பமாகும் எனவும், விண்ணப்பங்களை தமது செயலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் வன்னி மாவட்ட விளையாட்டுத்துறையினர் அறிவித்துள்ளனர். (ஜ-8)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.12

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களுக்கிடையே நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளில் இன்று சனிக்கிழமை காலை 8.00 மணி முதல் நடைபெறும் பெண்களுக்கான எல்லே போட்டியில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ நல்லூர் பிரதேச செயலக அணி எதிர் மருதங்கேணி பிரதேச செயலக அணி.

★ ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணி எதிர் வேலணை பிரதேச செயலக அணி.

★ உடுவில் பிரதேச செயலக அணி எதிர் நெடுந்தீவு பிரதேச செயலக அணி.

★ கரவெட்டி பிரதேச செயலக அணி எதிர் கோப்பாய் பிரதேச செயலக அணி.

★ சங்கானை பிரதேச செயலக அணி எதிர் சாவகச்சேரி பிரதேச செயலக அணி.

★ யாழ்ப்பாண பிரதேச செயலக அணி எதிர் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி. (ஒ-5)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.12

வல்வெட்டி குணசேகரா விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் அமரர் செ. சண்முகரத்தினம் ஞாபகார்த்தக் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று இரவு 7.30 மணிமுதல் நடைபெறும் அரையிறுதி ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ 4 பேர் கொண்ட கரப்பந்தாட்ட அரையிறுதி - புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் எதிர் வரணி இளைஞர் விளையாட்டுக்கழகம்.

★ செற் அப் அரையிறுதி ஆட்டம் - கெருடாவில் அண்ணா விளையாட்டுக கழகம் எதிர் பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழகம். (ஞீ-5)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.12

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மாகாணமட்ட வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

15 வயது, 17 வயது மற்றும் 19 வயது ஆகிய மூன்று பிரிவுகளாக இப்போட்டி நடத்தப்படுகிறது.

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.12

இணுவில் கிழக்கு கலாஜோதி விளையாட்டுக்கழகத்தின் புத்தாண்டு விளையாட்டு விழா எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

திறந்த முறையில் நடத்தப்படவிருக்கும் இந்த விளையாட்டுப் போட்டிகளில் தடகளம், போர்த்தேங்காய் உடைத்தல், கயிறு இழுத்தல், பலம பார்த்தல், கண்கட்டி அடித்தல், தலையணை அடி, விநோத உடைப்போட்டி மற்றும் சிறுவர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகள் ஆகியவை இடம்பெறவுள்ளன. அன்றய தினம் காலை 6.00 மணிக்கு இணுவில் லக்ஷ்மி தியேட்டர் முன்றிலில் இருந்து மரதன் ஓட்டப்போட்டி ஆரம்பமாகும். (இ-4)

★ ★ ★

வலி.வடக்கு,ஏப்.12

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக்கழகம் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று சனிக்கிழமை பி.ப.4.45 மணிக்கு அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பண்டத்தரிப்பு சாந்தவிநாயகர் வி.கழகமும் சுன்னாகம் கலைவாணி வி.கவும் பங்குபற்றுகின்றன. (ஒ-86)

## வடக்கு ஈராக்கில் உள்ள
# மோசுல் நகரமும் அமெரிக்கா வசம்!

பக்தாத்,ஏப்.12

ஈராக்கின் மூன்றாவது பெரிய நகரமான மோசுல் நேற்று அமெரிக்க மற்றும் குர்திஷ் படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளது. பெரும் மோதல் ஏதுமின்றி நகரம் கைப்பற்றப்பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈராக்கின் வடபகுதியில் அமைந்துள்ள மோசுலைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்ததைத் தொடர்ந்து, அதன் அருகே உள்ள சதாம் ஹுசைனின் சொந்த இடமான திக்ரித் நகரைக் கைப்பற்றுவதற்கான முயற்சிகளை அமெரிக்கா மேற்கொண்டுளளது. அங்கு இருக்கும் சதாமுக்கு விசுவாசமான படைகளின் பலம் பற்றி அறியும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

மோசுல் நகரைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளதன் மூலம் ஈராக்கின் பெரும்பாலான நகர்களை அமெரிக்கா தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துவிட்டது. தமமால் கைப்பற்றப்பட்ட வடக்கு நகரான கிர்குக்கையும் வெள்ளிக்கிழமை அமெரிக்கப் படையினரிடம் கையளிக்க இருந்ததாக குர்திஷ் தலைவர்கள் தெரிவித்தனர்.

மோசுலுக்குள் முன்னேறிய அமெரிக்கப் படையினரை அப்பகுதி மக்கள் ஆரவாரத்துடன் வரவேற்றதாக அமெரிக்க அதிகாரிகள் கூறினர். குர்திஷ்களின் கட்டுப்பாட்டில் மோசுல் நகரம் இருப்பதை தாம் அனுமதிக்கப் போவதில்லை என்று அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரிகள் கூறினர்.

வடக்கு ஈராக்கியப் நகர்கள் குர்திஷ்களின் கட்டுப்பாட்டில் இருந்தால் ஈராக் போரில் தானும் தலையிட வேண்டிவரும் என்று துருக்கி அரசு விடுத்த மிரட்டலே அமெரிக்கர்களின் இந்த நடவடிக்கைக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதனால் வடக்கு ஈராக்கிய நகர்களின் கட்டுப்பாடுகளை குர்திஷ்களிடம் இருந்து மீளப்பெறும் நிலைக்கு அமெரிக்கா தள்ளப்பட்டுள்ளது.

எனினும், அமெரிக்கப் படையினர் மத்தியில் குர்திஷ் போராளிகளுக்கு செல்வாக்கு இருப்பதால், அவர்களின் அழுத்தம் வடக்கு ஈராக்கிய நகரங்களில் இருப்பதை அமெரிக்காவால் முற்றுமுழுதாகத் தவிர்க்க முடியாமல் போகலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

## ஈராக்கில் சட்டம் ஒழுங்கைக் காக்க அமெரிக்கத் துருப்புக்கள் உதவும்·
### அதிபர் புஷ் தெரிவிப்பு



வாஷிங்ரன்,ஏப்.12

ஈராக்கில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட அமெரிக்கத் துருப்புகள் உதவி செய்யும் என அதிபர் ஜோர்ச் புஷ் உறுதியளித்தார்.

ஈராக் மக்களுக்கு புஷ் ஆற்றிய உரை தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்பட்டது.

சதாம் ஹுசைன் அரசு வீழ்ச்சியடைந்ததையடுத்து ஈராக்கின் பல்வேறு பகுதிகளிலும் கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்றுவருகின்றன.

இதையடுத்து சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட கூட்டணிப் படைகள் உதவி செய்யும். ஈராக்கியர்கள் பயமின்றி பாதுகாப்புடன் வாழலாம் என்றார் அவர்.

புஷ்ஷின் செய்தித்தொடர்பாளர் கூறுகையில், ஈராக்கில் பாதுகாப்பான நிலையைக் கொண்டுவர நீண்ட நாள்கள் தேவைப்படும் - என்றார்.

எனினும், சட்டம் ஒழுங்கைக் காக்க எந்தவிதமான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைக் கூற அவர் மறுத்துவிட்டார்.

கொள்ளைச் சம்பவங்கள் குறித்து கருத்து தெரிவித்த ஐ.நா. பொதுச் செயலாளர் கோபி அனான், ஈராக்கில் தற்போது அரசாங்கம் செயற்படுவதாகத் தெரியவில்லை - என்றார். (ம)

# குர்திஷ்கள் வசம் கிர்குக் நகரம்!

துபை,ஏப்.12

ஈராக்கில் சதாம் ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பிறகு, வடக்கில் உள்ள குர்திஷ் இனத்தவர் கிர்க்குக் நகரைக் கைப்பற்றியுள்ளனர்.

வடக்கு ஈராக்கில் எண்ணெய் வயல்கள் உள்ள கிர்குக் நகரில் அமெரிக்க ஆதரவு பெற்ற குர்திஷ் படைகள் நுழைந்தன. அங்கு ஈராக் படையினர் ஆரம்பத்தில் கடும் எதிர்ப்பைக் காட்டியதாகக் கூறப்படுகிறது. இப்போது அந்த நகரம் குர்திஷ்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது.

அதேசமயம், குர்திஷ் இனத்தவர் தனிநாடு கோருவதை துருக்கி ஏற்காது என அந்நாடு தெரிவித்துள்ளது.

நிருபர்களிடம் பேசிய அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் அப்துல் குல் நிலைமையை துருக்கி அரசு உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. தேவையான பேச்சுக்களை துருக்கி அரசு நடத்தும் என்றார்.



இதனிடையில், புதிய அரசு குறித்து அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ், பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் ஆற்றிய உரை ஈராக் மக்களுக்காக தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது. ஈராக் மீது பறந்துகொண்டிருக்கும் அமெரிக்க விமானத்தின் மூலமாக விசேட கருவிகளின் மூலம் அந்த உரைகள் ஒளிபரப்பப்பட்டன.

சதாம் ஹுசைன் அரசு விழுந்துவிட்டது. கொடூரமான அச்சம் தரும் ஆட்சி ஒழிந்துவிட்டது. ஈராக் மக்களாகிய நீங்கள் சுதந்திரமாக வாழ்வதற்குத் தகுதி படைத்தவர்கள். ஈராக் அரசும் இந்த நாடும் இனி உங்களுக்கே சொந்தமாகும் என்று தனது இரண்டரை நிமிடப் பேச்சியில் குறிப்பிட்டார் ஜோர்ஜ் புஷ்.

இதைப் போலவே, சதாமின் கொடுங்கோல் அரசு வீழ்ந்து அடக்குமுறை, அச்சம் இனி நீங்கி, நல்ல எதிர்காலம் ஈராக் மக்களுக்கு ஏற்பட இருக்கிறது என்று பிளயர் குறிப்பிட்டார்.

நிருபர்களிடம் பேசிய ஈராக் செய்தித்துறை அமைச்சர் முகமது சயீது அல்சஹாப், அமெரிக்கப் படைகள் முன்னேறவில்லை. அவற்றின் அதிகாரிகளும் தென்படவில்லை - என்றார். (ம)

## தற்கொலைத் தாக்குதல் அச்சத்தில்
# இரு ஈராக்கிய சிறுவர்களை சுட்டுக்கொன்றது அமெ. படை

பக்தாத்தின் தெற்கேயுள்ள நஸீரியா நகரிலுள்ள சோதனை நிலையம் ஒன்றில் அமெரிக்கப் படையினர் இரு ஈராக்கியச் சிறுவர்களைச் சுட்டுக்கொன்றுள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமையன்று தமது எச்சரிக்கையை மதிக்காமல் சென்ற வாகனத்தின் மீது தாக்குதல் நடத்தியதில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக அமெரிக்க 3ஆவது காலாட் படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மிகவேகமாக அந்த வாகனம் வந்ததாகவும் -

இரு தடவைகள் தாம் வழங்கிய உத்தரவைப் புறக்கணித்து அந்த வாகனச் சாரதி மேற்கொண்டு வாகனத்தைச் செலுத்த முயன்றதாகவும் -

அதனால், தற்கொலையாளி என்ற அச்சத்தில் படையினர் தாக்குதல் நடத்தியதாகவும் - படை அதிகாரி தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் வாகனத்தில் இருந்த மேலும் 9 பேர் படுகாயமடைந்தனர்.

தற்கொலைத் தாக்குதல் அச்சம் காரணமாக அமெரிக்கப் படையினர் ஈராக்கிய பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துவது இது முதற்றடவையல்ல. (ம)

# பக்தாத் நகரில் சண்டை நீடிப்பு

ஈராக் போர் மிகவிரைவில் முடிந்துவிடும் என்று கூறப்பட்டது. ஆனால், தலைநகர் பக்தாத்தைக் கைப்பற்றிய பின்பும் அங்கு சண்டை நிற்கவில்லை.

கடந்த சனிக்கிழமை பக்தாத் நகருக்குள் புகுந்த அமெரிக்க தரைப் படை வீரர்கள், நேற்றுமுன்தினம் அந்த நகரை முழுமையாக தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். எனவே, இனி சதாம் ஆதரவாளர்களிடமிருந்து எதிர்ப்பு இருக்காது என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், பக்தாத் நகருக்குள் ஆங்காங்கே மசூதிக்குள் பதுங்கி இருக்கும் ஈராக் தற்கொலைப்படை வீரர்கள் தொடர்ந்து சண்டையிட்டபடி உள்ளனர்.

சதாம் ஆதரவாளர்கள் அதிகம் உள்ள வடக்கு பக்தாத்தில் இரு தரப்பினருக்கும் இடையே நேற்று கடும் துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதில் அமெரிக்க வீரர் ஒருவர் உயிரிழந்தார்.

சண்டை தீவிரமாக உள்ள பகுதிகளுக்கு மேலதிகப் படையினரை அமெரிக்கா அனுப்பியுள்ளது. ஓரிரு நாள்களில் பக்தாத் நகரம் முழுவதிலும் சண்டை ஓய்ந்து அமைதி ஏற்படும் என்று 3 ஆவது காலாட்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கிடையே, சதாம் பிடியில் இருந்து ஈராக் மீட்கப்பட்டு விட்டது என்பதை உணர்ந்த மக்கள் தைரியமாக வீதிகளுக்கு வந்து ஆடிப்பாடி மகிழ்ந்தனர். அரசு அலுவலகங்களுக்குள் புகுந்து கொள்ளையடித்தனர். 5 முக்கிய அலுவலகங்களைத் தீ வைத்து எரித்தனர்.

நேற்று சதாம் உறவினர்கள் மற்றும் ஆதரவாளர்களின் வீடுகளை குறிவைத்து மக்கள் கொள்ளை அடித்தனர். சதாம் ஆட்சியில் முக்கிய பங்கு வகித்த அமைச்சர்களின் வீடுகளும், சூறையாடப்பட்டன. சொகுசு பொருள்கள் அனைத்தையும் பக்தாத் மக்கள், வாகனங்களை கொண்டு வந்து ஏற்றிச்சென்றனர்.

பக்தாத் மக்கள், கண்ணில் படும் கட்டடத்துக்குள் எல்லாம் புகுந்து வாரி சுருட்டுகின்றனர். நேற்று பக்தாத்தில் உள்ள ஜேர்மனி, பிரான்ஸ், நாடுகளின் தூதரகங்களுக்குள் புகுந்து இருக்கைகள், மின் கருவிகள், குளிர்சாதன பெட்டிகளை எடுத்துச் சென்றுவிட்டனர். தொடர்ந்து அவர்கள் கொள்ளையில் ஈடுபடுவதை அமெரிக்க வீரர்களால் தடுக்கமுடியவில்லை.

இதனால் பக்தாத்தில் சட்டம் ஒழுங்கு மோசமாகிக் கொண்டு இருக்கின்றது. அதை கட்டுக்குள் கொண்டு வர 4ஆவது காலாட் படைப்பிரிவை குவைத்தில் இருந்து அனுப்பி வைக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது. இன்னும் ஓரிரு நாள்களில் அவர்கள் பக்தாத்துக்குள் செல்வார்கள்.

பக்தாத்தில் சதாம் மகன் உதய் நடத்தி வந்த குளிர்பான நிறுவனத்தை நேற்று மக்கள் சூறையாடினார்கள். அமெரிக்க வீரர்களால் அதைத் தடுக்க முடியவில்லை.

என்றாலும் பக்தாத் நகர முக்கிய பாலங்கள், அமைச்சகக் கட்டடங்கள், 5 விமானத் தளங்கள் என்பன அமெரிக்க வீரர்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. முக்கிய இடங்களை பாதுகாக்க வேண்டியிருப்பதால் பொது மக்கள் நடத்தும் கொள்ளையை யாராலும் தடுக்க முடியவில்லை.

பக்தாத் பொலீஸாரும் மாயமாகிவிட்டதால், மக்கள் பணக்காரர்களின் வீடுகளுக்குள் புகுந்து கார், குதிரைகளையும் பறித்துச் செல்கின்றனர்.

பக்தாத்தில் கடும் குழப்பம் நிலவுகின்றது. இதனால், எந்த திசையில் இருந்து எத்தகைய தாக்குதல் வருமோ என்று அமெரிக்க வீரர்கள் பயந்தபடி உள்ளனர்.

அடுத்துவரும் நாள்களில் தற்கொலை தாக்குதல் அதிகரிக்கலாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. எனவே சதாம் ஆதரவாளர்கள், உறவினர்கள் வீடுகள் மீது குண்டுவீச்சு அதிகரிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 3.30 மணிக்கு மேற்கு பக்தாத்தில் உள்ள சதாமின் சகோதரர் வீடு மீது 5 ஆயிரத்து 400 கிலோ எடை கொண்ட 6 ஜே.டி.எம். குண்டுகள் வீசப்பட்டன. இதில் அந்த வீடு தரை மட்டமானது. இவர்தான் ஈராக் ரகசிய பொலீஸ் படையை நிர்வகித்து வந்தார்.

சதாமின் சொந்த ஊரான திக்ரித் மீதும் இன்று அதிகாலை சரமாரியாக குண்டுகள் வீசப்பட்டன. (ம)

### 105 அமெரிக்க படையினர் ஈராக்கில் பலி!

ஈராக் சண்டையில் இதுவரை 105 அமெரிக்க வீரர்கள் பலியாகி உள்ளனர். 12 பேர் போரில் சம்பந்தமில்லாத விபத்துகளில் கொல்லப்பட்டனர்.

அமெரிக்க வீரர்கள் 399 பேர் காயமடைந்தனர். 11 பேரைக் காணவில்லை. 7 பேர் ஈராக் படைகளிடம் போர்க் கைதிகளாகப் பிடிபட்டுள்ளனர். மேற்கண்ட தகவலை அமெரிக்க இராணுவ திணைக்களம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

# சதாமின் மகன்–மகள் வீடுகள் சூறை
## ஒரு பொருள் கூட மிஞ்சவில்லை

பக்தாத்,ஏப்.12

பக்தாத்தில் உள்ள சதாம் ஹுசைனின் மகன் - மகள் வீடுகள் சூறையாடப்பட்டன. அங்கு ஒரு பொருள் கூட மிச்சம் விடப்படாமல் பொது மக்களால் எடுத்துச்செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாக்தாத் நகரில் பெரும் பகுதியை அமெரிக்க கூட்டணிப் படையினர் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டனர். இதனால் பக்தாத்தில் சட்டம், ஒழுங்கு என்பன சீர்குலைந்துள்ளன. கொள்ளைச் சம்பவங்கள் தலைதூக்கியுள்ளன. கடைகளிலும் கட்டடங்களிலும் கூட்டம் கூட்டமாகச் சென்று பொதுமக்கள் கொள்ளையடித்து வருகிறார்கள்.

சதாமின் மகன் உதய் வீட்டையும் பொதுமக்கள் விட்டுவைக்கவில்லை. அங்குள்ள அனைத்துப் பொருள்களையும் அவர்கள் சூறையாடினார்கள்.



பொருள்களைச் சூறையாடிச் செல்லும் ஈராக்கியர்கள்

ஈராக் துணைப் பிரதமர் தாரிக் அஸீஸ், சதாமின் மகள் ஹாலா மற்றும் இராணுவ உயர் அதிகாரிகளின் வீடுகள் டைக்ரிஸ் நதிக்கரை ஓரம் உள்ள ஜட்ரியா, ஹேபால் ஆகிய பகுதிகளில் உள்ளன.

துணைப்பிரதமர் தாரிக் அஸீஸ் வீட்டுக்கு 20பேர் கொண்ட கும்பல் சென்று அங்கிருந்த பொருள்களைச் சூறையாடியது.

இதேபோல சதாமின் மகள் ஹாலா, அவருடைய ஒன்றுவிட்ட சகோதரர் வாட்போ ஆகியோரின் வீடுகளும் சூறையாடப்பட்டன.

தாரிக் அஸீஸ் வீட்டில் உள்ள மேசை, நாற்காலிகள், சோபா, திரைச் சீலைகள், சுவரில் மாட்டப்பட்டிருந்த ஓவியங்கள், மின்சார வயர்கள் என்று ஒன்றும்விடாமல் கொள்ளையடித்துச் செல்லப்பட்டுள்ளது. டிராக்டர்கள், பஸ்கள், லொறிகள் போன்ற வாகனங்களில் அள்ளிப்போட்டு அவற்றை எடுத்துச்சென்றனர்.

அதுபோல், தாரிக் அஸீஸ் நூலகத்தில் இருந்த புத்தகங்களையும் அவர்கள் அள்ளிச் சென்றார்கள்.

சதாமின் உறவினர் 'கெமிக்கல் அலி' வீட்டிலும் பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

கொள்ளையர்கள் அரச அலுவலகங்கள், ஆஸ்பத்திரிகள் என்று எல்லா இடங்களிலும் தமது கைவரிசை காட்டி வருகின்றனர்.

ஆஸ்பத்திரியில் கொள்ளையடிக்கப்பட்டதாக செஞ்சிலுவைச் சங்கத்தினர் வருத்தம் தெரிவித்து இருக்கின்றார்கள்.

"அரசு அலுவலகங்களில் சூறையாடி இருக்கக்கூடாது. அது சதாமின் சொத்துக்கள் அல்ல. அது மக்களின் சொத்து. புதிய அரசு அதைப் பயன்படுத்த விட்டிருக்கலாம்" என்று பொதுமக்களில் ஒருவர் தெரிவித்தார். (ம)

## முக்கிய அறிவித்தல்

எமது ஆர்.வி.ஜி. பீடிகள் தற்போது புதிதாக பச்சை, சிவப்பு நிறமுடைய கட்டு லேபலும்; சிவப்பு, பச்சை, மஞ்சள் நிறமுடைய பண்டல் லேபலும் ஒட்டப்பட்டு விற்பனை செய்துவருகிறோம் என்பதை எமது பீடி விற்பனையாளர், பாவனையாளர், ஆதரவாளர் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

58, நல்லூர் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தந்தி: ஆர்விஜி. (16598)

- ஆர்.வி.ஜீ. பீடி நிர்வாகம்.


## செயலமர்வு ஒத்திவைப்பு

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்காக இம்மாதம் 17ஆம் திகதி நடத்துவதெனத் திட்டமிடப்பட்டிருந்த போஷாக்கும் சுகாதாரமும் பற்றிய செயலமர்வு பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். கல்வி வலய ஆரம்பப் பிரிவுக்கான உதவிக கல்விப் பணிப்பாளர் திருமதி கமலா சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (சி-51)


## ஓர் அரிய சந்தர்ப்பம்

வரணி, குடமியன், இடைக்குறிச்சி, நாவற்காடு, கொடிகாமம் வாழ் மக்களின் வேண்டுகோளுக்கமைய கட்டடப் பொருள் கூட்டுத்தாபன முகவர் நிலையத்தின் கிளை கண்டி வீதி, (ரயில் நிலையம் முன்பாக) கொடிகாமம் எனும் முகவரியில் தனது சேவையை இன்று (12.04.2003) சனிக்கிழமை காலை ஆரம்பிக்கின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தரமான பொருள்களை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்,

**கட்டடப் பொருள் கூட்டுத்தாபனம்**
**கண்டி வீதி,**
(ரயில் நிலையம் முன்பாக)
**கொடிகாமம்.**

(16616)






- வெஸ்டன் யூனியன்மூலம் பணம் பெறும் அனைவருக்கும் மார்ச் மாதம் 26 ஆம் திகதியிலிருந்து விசேட புத்தாண்டு பரிசுகள் காத்திருக்கின்றன.
- இந்த அரிய சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்.
- இந்த பண்டிகை காலத்தில் வெஸ்டன் யூனியன்மூலம் பணத்தை அனுப்பி வெஸ்டன் யூனியனின் சர்வதேச கோலிங் காட்டுகளையும் அழகான குடைகளையும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளுமாறு உங்கள்அன்புக்குரியவர்களிடம் அறிவிக்கவும்
- ரூ.75,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை பெறும் அனைவருக்கும் இந்த வெகுமதிகள் கிடைக்கும்.

**விரையுங்கள்!**
இருப்பு இருக்கும்வரையே
இந்த சலுகை

ஹொட்லைன்: 452666

HOLMES POLLARD & STOTT

WESTERN UNION பணப் பரிமாற்றல்

மக்கள் வங்கி

செலான் வங்கி


## இரண்டாவது வருட இதய அஞ்சலி



| மலர்வு | உதிர்வு | மலர்வு |
|---|---|---|
| 04 - 01 - 1948 | 12 - 04 - 2001 | 18 - 07 - 1952 |



**அமரர்**
**சந்தியாப்பிள்ளை யேசுராசா**

**திருமதி**
**கிருபாகரன் மேரிதிரேசம்மா**

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
இரக்கத்தின் இலக்கணமாய் ஈகையின் சின்னமதாய்
குடும்பத்திற்கு ஒளி விளக்கை ஏற்றி விட்டு
இவ்வுலக வாழ்வு போதுமென இறைவன்
பாதம் சேர்ந்து விட்டீர்கள் - ஆனால்
நாமிங்கு உங்கள் நினைவால் தினம் வாடுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

கோவிந்தபுலம்,
இளவாலை.

வன்னியசிங்கம் வீதி,
தாவடி, கொக்குவில்.

(16273)

## விண்ணக வாழ்வின் 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 07 - 05 - 1951



இறப்பு 12 - 04 - 2001

**அருள்திரு. பற்றிக் இம்மானுவேல்**
**(குணேன்)**
குருத்துவம் *19.05.1978*

"ஆண்டவருள் இறப்பவர் பேறுபெற்றோர். இனி அவர் தம் உழைப்பினின்று இளைப்பாறுவார். ஏனெனில், அவர் செய்த நன்மைகளே அவர்களைப் பின் தொடர்ந்து கூடவரும்" (திருவெளிப்பாடு 14:13)

*54/3, சந்தானமாதா கோயில்*
*முன் ஒழுங்கை,*
*பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம்.* (16653)

உம்மை என்றும் மறவாத
அம்மா, அக்கா, அத்தான்,
அருமை மருமகள்.

## ஈர விழிகளில் 31ஆம் நாள் நினைவுகள்

மண்ணில் 20 - 04 - 1974



விண்ணில் 13 - 03 - 2003

**அமரர் பிலேந்திரன் தனநாயகம்**

அழுகின்றாள் உனை நினைந்து
அன்னையவள் என்ன செய்வாள்?
அழுதழுது அவள் விழிகள்
அலுத்துப்போய் விட்டதையா
உன்னையே நினைத்து
உன்னிலே வாழ்ந்த
உன் சோதரிகள்
உன்னிலே வீழ்ந்தனர்
உன் நினைவாக.
மண்ணிலே நீ வீழ்ந்தாலும்
மரிக்கவில்லை என்று
மதிக்கின்றனர் உன் மைத்துனர்மார்
மண்ணில் இன்னொருமுறை நீ வருவாயா?
பாடிப்பாடி உனை நினைந்து
பார்த்துக்கொண்டு இருக்கின்றனர்
பாசமுள்ள மருமக்கள்
பாரினிலே இன்னுமொரு முறை நீ
வரமாட்டாயா என்று.
இத்தனையும் மறந்து நீ எங்கே சென்றாய்
இறைவன் வீட்டில் வாழ்வதற்கா?

பிரிவால் துயருறும் :
தாய் : பிலேந்திரன் - திரேசம்மா
சகோதரிகள்
யேசுராசா - பிரான்சிஸ்கா
சூசையப்பு - மேரிமேற்றலின்
ஜோர்ஜ்எட்மன் - எம்செல்லஸ்திக்கா
றொபேட்டெஸ்மன் - ஜெயநாயகி
பயஸ் - றஞ்சிதா
மருமக்கள் அனைவரும்.

*நாரந்தனை தெற்கு,*
*ஊர்காவற்றுறை.*

(16648)

உதயன்

## கூட்டமைப்பு - பிரதமர் சந்திப்பின் பெறுபேறு

தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அலரிமாளிகையில் சந்தித்து முக்கியமாக இரண்டு விடயங்கள் பற்றிப் பேசியிருக்கிறார்கள்.

ஒன்று - யாழ்.நகரில் புதிதாக இராணுவ முகாம் அமைத்தல்.

மற்றையது - தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குதல்.

சுபாஸ் ஹோட்டல், ஞானம்ஸ் விடுதி ஆகியவை அடங்கிய பகுதியில் இப்போதுள்ள தமது முகாமை விட்டு விட்டு, யாழ்.மாநகரசபைக்குச் சொந்தமான காணிப் பகுதியில் புதிதாக முகாமை அமைத்து அங்கே செல்ல இராணுவத்தினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

தற்போதுள்ள முகாமை விட்டுச் செல்வது சரி. ஆனால், புதிய முகாமை யாழ். முற்றவெளிப் பகுதியில் பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள், யாழ்.பொது நூல்நிலையம், விளையாட்டு அரங்கு, சிறுவர் பூங்கா ஆகியவற்றிற்கு அருகில் மாநகரசபைக் காணியில் அமைப்பதை யாழ்.மக்கள் பலமாக எதிர்க்கின்றார்கள்.

புதிதாக முகாம்களை அமைக்கும்போது மக்கள் செறிந்து வாழும் பகுதிகளிலோ அல்லது பொது நிறுவனங்கள் அமைந்துள்ள பகுதிகளிலோ அவற்றை அமைக்கக்கூடாது என்று கூட்டமைப்பு எம்.பிக்கள் பிரதமரிடம் வற்புறுத்தினர்.

யாழ்.நகரில் வேறு எங்கே முகாமை அமைக்கலாம் என்று அதற்கான இடத்தை தெரிவு செய்ய பாதுகாப்புப் பகுதி அதிகாரிகளும் கூட்டமைப்பு எம்.பிக்களும் யாழ்.சென்றார்கள்.

பாதுகாப்பு அதிகாரிகள் விரும்பிய இடங்கள் ஏற்றவையாகக் கூட்டமைப்பு எம்.பிக்களுக்குப் படவில்லை. கூட்டமைப்பு எம்.பிக்கள் சுட்டிக்காட்டிய இடங்கள் பொருத்தமானவையாகப் பாதுகாப்பு அதிகாரிகளுக்குத் தோன்றவில்லை.

இந்த நிலையிலேயே கூட்டமைப்பு எம்.பிக்கள் பிரதமரைச் சந்தித்தார்கள்.

மாநகரசபைக் காணியில் முகாம் அமைக்கும் வேலைகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. அந்த நிலை தொடரும். முகாமை எங்கே அமைப்பது என்று முடிவு செய்வோம் என்று கூட்டமைப்பு எம். பிக்களிடம் பிரதமர் தெரிவித்திருக்கின்றார்.

அதாவது, பிரச்சினைக்கான தீர்வு பின்போடப்பட்டிருக்கின்றது. அவ்வளவுதான்.

அது அப்படி, தொண்டர் ஆசிரியர்கள் நியமனம் விடயத்தில் ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்ட 1000 தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவது என்று கொள்கை அளவில் பிரதமர் ஒப்புக் கொண்டிருக்கின்றார். கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்குவிற்குச் சில பணிப்புரைகளையும் விடுத்திருக்கிறார்.

அவற்றின்படி நியமனங்களை வழங்குவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட கோவைகளைச் சட்டமா அதிபருக்கு அனுப்பி அவருடைய ஒப்புதலைப் பெற வேண்டும். ஒப்புதல் கிடைத்ததும் நியமனங்களை வழங்குவதற்குக் கல்வி அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இது ஒரு நல்ல முன்னேற்றம் என்றாலும், காரியம் எப்போது செய்து முடிக்கப்படும் என்பது கேள்வி. முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்தும் கூட, ஏதோ காரணங்களைக் காட்டித் தமக்கு நியமனம் வழங்கப்படாத கசப்பான அனுபவத்தைக் கொண்டவர்கள் வடக்கு - கிழக்கு தொண்டர் ஆசிரியர்கள்.

அதனால்தான் அவர்கள் இம்முறை திருகோணமலையில் மறியல் போராட்டத்தையும் சுழற்சி முறை உண்ணாவிரதத்தையும் ஆரம்பித்தார்கள்.

ஒரு போராட்டம் சுமார் ஒன்றரை மாத காலம் தொய்வு ஏதும் இல்லாமல் தொடர்ந்து நடப்பது என்றால் சும்மாவா?

தாய்மாரான தொண்டர் ஆசிரியர்கள் சிலர் தங்கள் கைக்குழந்தைகள் சகிதம் உண்ணா விரதத்தில் கலந்துகொண்டு தமது உறுதிப்பாட்டைக் காட்டினார்கள்.

தமிழ் ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவும் வடக்கு - கிழக்கில் தொண்டர் ஆசிரியர்களும் இல்லை என்றால் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப் படும் என்பதால் பொதுமக்களும் மிகப்பெரும் ஆசிரியர் சங்கமான தமிழர் ஆசிரியர் சங்கமும் கூடத் தொண்டர் ஆசிரியர்களின் உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்கும் நிலை ஏற்பட்டது.

தமிழர் ஆசிரியர் சங்கம் அரசாங்கத்துக்குப் பாடசாலைப் பகிஷ்கரிப்புப் போராட்ட அச்சுறுத்தலும் விடுத்தது.

விடயம் இவ்வளவு முற்றிய பின்னர்தான் அரசாங்கம் அசைந்து கொடுத்திருக்கிறது.

ஆரம்பத்திலேயே பிரச்சினைக்குத் தீர்வு கண்டிருக்கக் கூடாதா?

அரசியல் உரிமை என்றாலும் சரி, வேறு எந்த உரிமை என்றாலும் சரி, போராடித்தான் பெற வேண்டும் என்று அரசு எதிர்பார்க்கிறதா? இது ஆரோக்கியமான கொள்கை அல்ல, ஆபத்தானது.

---

ஜி.சீ.ஈ. பரீட்சைக்குத் தோற்றும்

## யூனியன், மகாஜன மாணவருக்கு கல்விப் பணிப்பாளர் ஆலோசனை

**அனுமதி அட்டை பிரதி எடுத்துச்செல்லவேண்டுமாம்**

வலிகாமம் தெற்கு,ஏப்.12

எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாக உள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆகியவற்றில் இயங்கும் பரீட்சை நிலையங்களில் தோற்றுவோர் தமது பரீட்சை அனுமதி அட்டைகளின் புகைப்படப் பிரதி ஒன்றை தினமும் தம்முடன் எடுத்துச் செல்லவேண்டுமென வலிகாமம் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

குறிப்பாகத் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் அனுமதிப்பத்திரத்தின் புகைப்படப் பிரதியை தினமும் பரீட்சைக்குச் செல்லும்போது தம்முடன் எடுத்துச்செல்வது அவசியம் எனவும் - அவர் தெரிவித்துள்ளார்.

பரீட்சார்த்திகள் பாதுகாப்பு படையினரின் அனுமதியை சிரமமின்றி பெற்றுக்கொள்ளவும் -

தம்மை பரீட்சார்த்திகள்தான் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும் -

தாமதமின்றி பரீட்சை மண்டபத்துக்குச் செல்லவும் இது உதவியாக இருக்கும் என்றும் கல்விப்பணிப்பாளர் தமது ஆலோசனையில் அறிவுறுத்தியுள்ளார்.

அனுமதி அட்டைகள் பரீட்சை ஆரம்பமான தினத்திலன்றே பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுவிடும் என்பதால்அதன் புகைப்படப் பிரதியை பரீட்சை ஆரம்பமாகும் தினதத்துக்கு முன்பதாகவே தயார்நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும் என்றும்-

அவர் அறிவுறுத்தியுள்ளார். (எ-152)

---

## நாட்டு நடப்பு

### அம்மா போட்ட சட்டை

குலமகள் தேர்த் திருவிழாவிற்கு
கூட்டியே மகவைச் சென்றாள்
அலைகடல்போல மக்கள்
ஆங்கே திரண்டனர் ஒன்று கூடி
தலைமகள் தனைப்பிரிந்து
தவித்தது அப் பெண் குழந்தை
மலைத்த அக்குழந்தையோ
'மம்மி'யென்று அலறலுற்றாள்

அம்மாவின் சேலையை ஏன்
அன்புடன் நீ பற்றவில்லையென்ன
அம்மாவோ சேலை கட்டிக் கொண்டு
ஆலயம் செல்வதில்லை என்றாள்
அம்மாவின் சட்டையை ஏன்
ஆதாரமாய் கொள்ளவில்லையென்ன
அம்மாபோடும் சட்டையோ
அதி மிக உயரம் என்றாள் .
அம்மா அண்டை துள்ளிப் பார்த்தேன்
அகப்படவில்லை சட்டை என்றாள்.

- விகடகவி.

---

யாழ்.நகரப் பகுதிக்குள்

# புதிய முகாம் அமைக்கும் விடயத்தில் மக்களின் கருத்துக்கு முக்கியத்துவம்

## கூட்டமைப்பு எம்.பிக்களிடம் பிரதமர் உறுதி

கொழும்பு,ஏப்.12

யாழ்.நகரப்பகுதியில் புதிய இராணுவ முகாம் அமைக்கும் விடயத்தில் யாழ்.மக்களின் கோரிக்கைக்கு சாதகமாகவே நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளதாக கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நேற்று முனதினம் நடந்த சந்திப்பிலேயே பிரதமர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பின்போது, யாழ்ப்பாணத்தில் இராணுவ முகாம் மாநகர சபைக்குரிய காணியில் அமைப்பதற்கு இராணுவத்தினரால் எடுக்கப்பட்ட முயற்சிகள் சம்பந்தமாகவும், கலந்துரையாடப்பட்டது.

இராணுவத்தினர் தங்கள் முகாம்களை மாற்றி அமைக்கின்றபோது, தமிழ்க்குடிமக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் அல்லது பொது நிறுவனங்கள் அமைந்திருக்கும் பிரதேசங்களில் இராணுவ முகாம்கள் அமைக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும் என்பதை தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் வலியுறுத்தினர்.

கடந்த 20ஆண்டுகால யுத்தத்தின்போது, தமிழ்மக்கள் இராணுவ நடவடிக்கைகளால் பலவிதமான இன்னல்களையும் துன்பங்களையும் அனுபவித்தனர். இவற்றை தமிழ் மக்கள் மறக்கவில்லை என்றும் -

தம்மத்தியில் இராணுவத்தினரின் கூடுதலான பிரசன்னத்தை தமிழ்மக்கள் விரும்பவில்லை எனவும் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பிரதமருக்கு சுட்டிக்காட்டினர்.

இககாரணத்தின் நிமிர்த்தம் புதிய இராணுவ முகாம் மாநகர சபைக்குச் சொந்தமான இடத்திலோ அல்லது அதனை அண்டிய பிரதேசத்திலோ அமைக்கப்படக் கூடாது என்றும் தற்போது இது சம்பந்தமாக விதிக்கப்பட்டிருக்கும் தடை தொடர வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

இவ்விடயம் சம்பந்தமாக உரிய சாதகமான நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் அப்போது உறுதியளித்தார். இவ்வாறு இரா.சம்பந்தன் மேலும் தெரிவித்தார். (ஒ-3)

## பத்து சிறந்த மாணவர்களில் வடக்கு-கிழக்கிற்கு இடமில்லை!

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்ற முதல் பத்து மாணவ, மாணவியரில் தமிழ் மாணவர் எவரும் இடம்பெறவில்லை.

கொழும்பு மியூஸியஸ் கல்லூரி மாணவி ஒருவரே சிறந்த பெறுபேறுகளுடன் முதலிடத்தைப் பெற்றிருக்கிறார். காலி சவுத்லண்ட்ஸ் கல்லூரியின் இரு மாணவிகள் இரண்டாமிடத்தைப் பெற்றிருக்கின்றனர். வடக்கு - கிழக்கைச் சேர்ந்த எந்தவொரு மாணவரும் அதிக புள்ளிகளைப் பெற்ற முதல் பத்து மாணவர்களில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கண்டி ஹில்வுட் கல்லூரி மாணவி, கொழும்பு மியூசியஸ் கல்லூரி மாணவி, கொழும்பு றோயல் கல்லூரி மாணவன், மாத்தறை ராகுல கல்லூரி மாணவன், கொழும்பு பிஷப் கல்லூரி மாணவி, கொழும்பு விசாகா கல்லூரி மாணவி, கொழும்பு தேவிபாலிகா வித்தியாலய மாணவி, கொழும்பு விசாகா வித்தியாலய மாணவி, எகலியகொட மத்திய மகாவித்தியாலய மாணவி ஆகியோர் ஏனைய இடங்களைப் பெற்றிருக்கின்றனர். (ஒ)

# புளியங்குளம் பகுதியில் விரைவில் தியாகி திலீபன் மருத்துவமனை

யாழ்ப்பாணம்,ஏப்.12

வவுனியா வடக்குப் பிரதேசமான புளியங்குளப்பகுதியில் தியாகி திலீபன் மருத்துவ நிலையமொன்று இம்மாத நடுப்பகுதிக்குள் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான முன்னேற்பாட்டு வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகதமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் அருண் தெரிவித்துள்ளார்.

வவுனியா வடக்குப் பகுதியில் தற்போது மீளக்குடியமர்ந்து வரும மக்கள், தமது வைத்தியத் தேவைகளை நிறைவு செய்ய வவுனியா வைத்தியசாலைக்கு மிக நீண்டதூரம் செல்லவேண்டியுள்ளது. இவர்கள் அங்கு செல்வதற்கு போக்குவரத்து வசதிகளும் பிரச்சினையாகவுள்ளது. இதனால், இப்பகுதியில் பெருமளவு எண்ணிக்கையான மக்கள் நோய்களுக்கு ஆளாகின்றார்கள். இதனைக் கருத்திற் கொண்டே தியாகி திலீபன் மருத்துவ நிலையம் ஒன்றை இப்பகுதியில் அமைப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதென தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இராணுவ நடவடிக்கைக்கு முன்னர் புளியங்குளப் பகுதியில் அரச வைத்தியசாலை ஒன்று இயங்கி வந்ததாகவும் அந்த வைத்தியசாலையை மீள இயக்குவதற்கு இதுவரை எந்த வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-8)

### நாளை

பங்குனி 30
ஞாயிற்றுக்கிழமை
(13.04.2003)
திதி : ஏகாதசி
முற்பகல் 10.03 வரை.
நட்சத்திரம்: மகம்
பிற்பகல்: 2.08 வரை.
ஏகாதசி விரதம்
சுபநேரம் : 9.06 -10.36
ராகுகாலம் : 4.36 - 06.06
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

கவனமும் அறிவும் அதிர்ஷ்டத்தைக் கொண்டு வரும்.


## செல்வக் குருநாதன்!



*அருவென்றும் உருவென்றும் சொல்லாதவன்*
*ஆதியந்தமில்லாத எங்கள் குருநாதன்*
*வருவாரைப் போவாரைத் தெருவில் –*
*வைவான் சிரிப்பான் மகிழ்ச்சியும் தருவான்*
*ஒரு பொல்லாப்பும் இல்லையென்பான்*
*உண்மை முழுதும் என்பான்.*
*நாமறியோம். எப்பவோ முடிந்தது என்பான்.*
*கொழும்புத்துறையில் குடியிருந்த*
*செல்வக் குருநாதனே! உந்தன்*
*திருவடியை எண்ணி நாமும்*
*வாழ்ந்திடுவோமே!*

திருமதி தெய்வமாலினி செந்தில்குமரன்,
*கொழும்புத்துறை.*
(இன்று யோகர் சுவாமிகளின் குருபூசைத்தினம்)

## சீமாட்டியின் மாபெரும் மலிவு விற்பனை

புத்தாண்டை முன்னிட்டு பிரத்தியேகமாக இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய ஜவுளிரகங்கள் அத்தனையும் என்றும் எங்கும் கிடைக்காத மலிவு விலையில

**சீமாட்டி புடைவைக் கடலில்**

விற்பனையாகிக்கொண்டிருக்கின்றன!

உங்கள் எண்ணம்போல் வண்ணம் வண்ணமாய்
எண்ணற்ற ஜவுளிகளைத் தெரிவு செய்திட
நாடவேண்டிய ஒரே நிறுவனம்

**சீமாட்டி புடைவைக் கடல்**

கூறை முகூர்த்தப் பட்டுப் புடைவைகள், கூறைச் சேலைகள்,
பட்டு வேட்டிகளுக்குக் கைராசியான ஒரே ஸ்தாபனம்

**சீமாட்டி புடைவைக் கடல்**

122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 2196 Fax: 2102

இதே மலிவு விற்பனை எமது ஒரே கிளை நிறுவனமான

**மங்கை சில்க்**

15, நவீன சந்தை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
என்ற புடைவை அகத்திலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

(சி-27272)



## தீர்க்கதரிசி ஹாவாட் வில்லாட்
## PROPHET HOWARD A WILLARD

★ உங்கள் குணமாக்க முடியாத வியாதியை குணமாக்க.....
★ உங்கள் எதிர்காலத்தை குறித்து எதிர்வு கூற....

சந்திக்க வாரீர்

எங்கே? அசெம்பிளி ஒப் கோட், சாவகச்சேரி
(பிரதான வீதி, பழைய உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் அருகே)

எப்போது? 10,11,12,13 ஏப்ரல் 2003
மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகி 7.00 மணிக்கு முடிவடையும்.

(சி-27282)


## மூன்றாவது ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 09 - 07 - 1968



அநியாய பறிப்பில் 12 - 04 - 2000

**நமசிவாயம் ஞானலிங்கம் (கண்ணன்)**

பிரான்ஸ் நாட்டில் 12 வருடங்கள் வாழ்ந்து
எம்மைக் காணத் துடித்தீரே! இன்று எம்மை
விட்டுப் பிரிந்து மூன்று ஆண்டுகள் சென்றாலும்
எங்கள் செல்லக் கண்ணனின் நினைவு உமது அம்மா,
சகோதரர்கள், மருமக்கள் நெஞ்சங்களில் என்றும்
நீங்காது. நாம் மறந்து இருப்போம்; ஆம்
அன்றுதான் நாங்கள் இறந்து இருப்போம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்,
அம்மா, சகோதரர்கள்,
மருமக்கள்.

குகன் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(16638)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 15 - 02 - 1925



விண்ணில் 12 - 04 - 2000

**அமரர் பஸ்ரியன் றோமபாலா**

அன்பின் திருவுருவே!
பண்பின் உறைவிடமே!
வாழ்வின் வழிகாட்டியே!
குடும்பத்தின் ஒளிவிளக்கே!
எமது ஆருயிர்த் தெய்வமே!
ஆண்டுகள் பல சென்றாலும்
ஆறாது எம் துயரம்.

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல.125, ஸ்ரேசன் றோட்,
யாழ்ப்பாணம்.

(16639)

## நூல் வெளியீட்டு விழா

புதிய ஜனநாயகக் கட்சியின் செயலாளர் சி.கா.செந்திவேல் எழுதிய 'வடபுலத்து பொதுவுடைமை இயக்கமும் தோழர் கார்த்திகேயனும்' என்ற நூலின் வெளியீட்டுவிழா இன்று பி.ப.4 மணிக்கு யாழ்நகரிலுள்ள 'சிற்றிஹோல்' மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ் விழாவில் வெளியீட்டுரையை இ.தவராஜா நிகழ்த்துவார். சட்டத்தரணி சோ. தேவராசா, 'தாயகம்' ஆசிரியர் க.தணிகாசலம், சி.நவரத்தினம் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர். (ஓ-135)


## MATHS CENTRE
M.M.V. Road - Nelliady

O/L - DAY CLASS பகல் நேர வகுப்பு

அனுபவமுள்ள, சிறந்த பெறுபேறுகளை ஏற்படுத்திய ஆசிரியர் குழு

விரைவில் ஆரம்பமாகவுள்ளது.

(16549)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பளவத்தை,
பொலிகண்டி.

(16596)

அமரர்
**வேலுப்பிள்ளை கிருஷ்ணசாமி**
*(பனை தென்னை வள கூட்டுறவு உத்தியோகத்தர்)*

உதயம் 10-08-1945
அஸ்தமனம் 12-03-2003

அப்பா!
காற்றாய் வந்தீர்கள்
கரும்பாய்இனித்தீர்கள்
அறிவாய் நடந்தீர்கள்
ஏன் எங்களை மறந்தீர்கள்?

உங்கள் ஆத்மா சாந்தியடைய பொலிகண்டி
வீரபத்திரப் பெருமானை வேண்டி நிற்கிறோம்.

குறிப்பு: இன்று (12.04.2003) சனிக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். இவ்வறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

- குடும்பத்தினர்.

## ஓராண்டின் உள்ளம் சுமக்கும் நினைவலைகள்

மலர்வு 1927 - 05 - 04



உதிர்வு 2002 - 04 - 25

**திருமதி வேலுப்பிள்ளை செல்லம்மா**

திதி:- சதுர்த்தசி 2003-04-15 (செவ்வாய்)

அன்பின் தெய்வமே!
பாசத்துடன் வளர்த்த அன்னையே
அம்மா என்று நினைக்கும் போது
உருகுதம்மா நெஞ்சமெல்லாம்
பன்னிரண்டு செல்வங்களை பெற்றெடுத்து
பகலிரவாய் பாலூட்டி வளர்த்த அன்னையே ~ உங்களின்
செல்வங்களுக்கு நாடறியும் புகழைத் தேடித்தந்துவிட்டு
விண்ணுலகம் சென்று விட்டீரோ? ~ அம்மா
ஆண்டுகள் பல சென்றாலும்
ஆறாதம்மா எம்துயரம்.

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

தகவல்:
வேலுப்பிள்ளை தர்மலிங்கம்
(கனடா)

உமது பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தங்கள் கவனத்திற்கு: 2003.04.15 அன்று நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'செல்வ வாசா'
வண்ணாங்கேணி (கண்டி வீதி), பளை.

(சி-27170)

# ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் புனர்வாழ்வுக் குழுக்கள் அமைப்பு

## சமூகசேவை அலுவலர் ஏற்பாடு

ஊர்காவற்றுறை,ஏப்.12

ஊர்காவற்றுறை பிரதேச செயலா பிரிவிலுள்ள ஒவ்வொரு கிராம சேவை அலுவலர் பிரிவு ரீதியாக சமூகத்திலுள்ள விசேட தேவைக்குரியவர்களுக்கு உதவும் பொருட்டு சமுதாய மட்டத்திலான புனர்வாழ்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதற்கான நடவடிக்கைகளை ஊர்காவற்றுறை பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் த.கிருபாகரன் மேற்கொண்டு வருகின்றார்.

கடந்த திங்கட்கிழமை அனலைதீவில் இடம்பெற்ற குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் கூட்டத்தில் அனலைதீவு கிராம அலுவலர்களான வ.வடிவழகையன், பொ.அன்பழகன் ஆகியோரும் பொதுமக்கள் மத்தியில் இருந்து ம.ஜெகதா, இ.மஞ்சுளா, இ.மகேஸ்வரி ஆகியோரும் இந்தக் குழு உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவ்வாறு தெரிவு செய்யப்படும் குழு உறுப்பினர்களுக்கு விரைவில் இது தொடர்பான பயிற்சி அளிக்கப்படவுள்ளதாகவும் -

இவர்கள் மூலம் சமூகத்தில் விசேட தேவைக்குரியவர்கள் தெரிவு செய்யப்பட்டு சமூகத்தில் வைத்தே புனர்வாழ்வு அளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் காலப்போக்கில் சமூகத்தில் தங்கிவாழும் நிலையில் இருந்து சுயதொழில் முயற்சியில் ஈடுபடுவதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளதாகவும் - ஊர்காவற்றுறை பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் தெரிவித்தார். (எ-16)

## ஜூலை 14முதல் 20 வரை

# உள்ளூராட்சி வாரத்தை சிறப்பாக அனுஷ்டிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.12

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள 72 உள்ளூராட்சி மன்றங்களிலும (பிரதேசசபை, நகர சபை, மாநகர சபை) உள்ளூராட்சி வாரம் தொடர்பான முன்வரைபுகளை உடன் அனுப்பிவைக்குமாறு உள்ளூராட்சி ஆணையாளர் தெ.து.விஜயலட்சுமி கேட்டுள்ளார்.

மேற்படி விவரம் அடங்கிய முன்வரைபுகளை அந்தந்த பிராந்திய உளளூராட்சி உதவி ஆணையாளருடாக எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

முன்வரைபுகளில் மரம் நாட்டுதல், சிறுவர் போட்டி, தலைமைத்துவப் பணபுகள், சனசமூக அமைப்புக்கள், பொது அமைப்புகள், சிறுவர் அமைப்புகள் என்பனவற்றை உள்ளடக்கியதாக இருப்பதுடன் -

உள்ளூராட்சி மன்றங்கள் மக்களிற்கு தாம் வழங்கும் சேவைகளை கருத்திற்கொண்டு நூலக சேவை, துபபரவுசேவை, கலை, கலாசார மற்றும விளையாட்டு நிகழ்வுகளை உள்ளடகியதாக இருக்கவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி வாரம் கடந்த காலங்களைவிட இவ்வாண்டு ஜூலை 14 முதல் ஜூலை 20 வரை சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது. சிறப்பாகச் செயற்படும் உள்ளூராட்சி மன்றத்துக்கு மாவட்டமட்டம், மாகாணமட்டம், தேசிய மட்டம் என மூன்று பிரிவாக பரிசில்களும் சான்றிதழ்களும் மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைப்பினால் வழங்கப்படும். (ஐ-185)

# பிரிட்டிஷ் தூதரகம் மீது கல்வீச்சு சிங்களவர் ஒருவர் கைதானார்!

கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகம் மீது கல்லெறிந்த ஒருவர் கொள்ளுப்பிட்டிப் பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டார்.

கடந்த புதனன்று முற்பகல் நடந்த இச்சம்பவத்தில் தூதரகத்தின் நுழைவாசல் கதவின் கண்ணாடி நொறுங்கியது என்று பொலீஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்டவர் 42 வயதுடைய ஒரு சிங்களவராவார்.

இரு மாதங்களுக்கு முன்னர் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம மீது நடந்த கல்வீச்சுக்கும் இவரே காரணம் என்பது பொலீஸ் விசாரணையில் தெரியவந்திருக்கிறது.

பொலீஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஏ)

# மஜிஸ்திரேட் நீதிமன்ற நீதிவான்கள் பிரதம நீதியரசருக்கு எதிராக 'ரிட்' மனு

நீதிவான் நீதிமன்ற நீதிவான்கள் இருவர் பிரதம நீதியரசருக்கும், நீதிச் சேவைகள் ஆணைக் குழுவுக்கும் எதிராக இரண்டு 'ரிட்' மனுக்களை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர்.

பிரியதர்சன பண்டாரநாயக்க, டி.எம் சிறிவர்தன ஆகியோரே மனுத்தாக்கல் செய்தவர்களாவர்.

பிரியதர்சன பண்டாரநாயக்க வேலைநீக்கம் செய்யப்பட்டவர். டி.எம். சிறிவர்தன கட்டாய லீவில் அனுப்பப்பட்டவராவார். பிரியதர்சன பண்டாரநாயக்கவின் நீதிமன்றத் தனி அறையில் டென்சில் பெட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து அவர் பிரதம நீதியரசரால் வேலை நீக்கம் செய்யப்பட்டார். டி.எம்.சிறிவர்தன பொலீஸ் சோதனைச்சாவடியில் தான் மேல் நீதிமன்ற நீதிபதியெனக் கூறினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கட்டாய லீவில் அனுப்பபட்டார்.

தங்களை மீண்டும் பதவியில் அமர்த்துமாறும், சம்பள உயர்வு பெற்றுத்தருமாறும் மனுதாரர்கள் தமது மனுவில் கேட்டுள்ளனர்.

மனுவை ஆதரித்த சட்டத்தரணி ரட்ணவேல் ஆஜராகியுள்ளார். (எ)

# மானிப்பாய் சம்மேளனத்துக்கு விரைவில் அறுவடை இயந்திரம்

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் நெல் அறுவடை இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்யவுள்ளது.

இதற்கான தீர்மானம் கடந்த வாரம் சம்மேளனத் தலைவர் சி.பொ. மா.க முதலியார் தலைமையில் நடைபெற்ற சம்மேளன செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நெல் அறுவடை செய்யும் காலத்தில் வயல் கூலி தொழிலாளர்களுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுவதால் உரிய காலத்தில் நெல் அறுவடை மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும்-

இதனால் நெல் அறுவடை இயந்திரம், சம்மேளனத்தில் இருக்கவேண்டியது அவசியம் என்றும் -

விவசாயிகள் சம்மேளன உறுப்பினர்களுக்கும் ஏனைய விவசாயிகளுக்கும் சகாய கட்டணத்தில் நெல் அறுவடைக்கு இதனை வாடகைக்கு விட முடியும் என்றும் - இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (எ-135)

## சிறுகதைப் போட்டி

யாழ்.சென்றேக்ஸ் இளைய தலைமுறைக் கழகம் நடத்தும் சிறுகதைப் போட்டிக்கான ஆக்கங்கள் இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

'உண்மைக்கு நீதியில்லை' என்ற தலைப்பில், ஐந்து புல்ஸ்கப் தாளில் இந்த ஆக்கங்கள் அமையவேண்டும் எனவும், 25வயதுக்கு மேற்பட்டவர்கள் இந்தப் போட்டியில் கலந்துகொள்ள முடியும் எனவும், சனசமூக நிலையத் தலைவர் பீற்றர் போல் அறிவித்துள்ளார். (எ-51)

# வெளிவாரிப் பரீட்சை பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஏப்.12

யாழ்.பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி இடம் பெறவிருந்த 2001ஆம் ஆண்டிற்கான வணிகமாணி - பகுதிII வெளிவாரிப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றையதினம் இடம்பெறவிருந்த ஈ.எக்ஸ்.கொம் 3.2-உற்பத்தியும் பொருள் முகாமைத்துவமும் என்ற பாட அலகுக்கான பரீட்சையே எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறுமென்றும் -

ஏனைய பாட அலகுகளுக்கான பரீட்சைகள் வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறுமென்றும் -

யாழ்.பல்கலைக் கழக வெளிவாரிப் பதிவுகள், பரீட்சைகள் அலகினர் அறிவித்துள்ளனர். (ஒ-9)

# வீதி திருத்த ஒதுக்கிய நிதி போதாது என முறைப்பாடு

அரியாலை,ஏப்.12

நீர்வேலி தெற்கு பூதர்மடம் வீதி மற்றும் இந்து மயானம் போன்றவற்றை புனரமைப்பதற்கென ஒதுக்கப்பட்டிருக்கும் 2லட்சத்து 50ஆயிரம் ரூபா நிதி போதாது என்று கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்திருக்கின்றனர்.

போக்குவரத்து செய்யமுடியாதவாறு பெரும் சேதமடைந்திருக்கும் பூதர்மடத்தில் இருந்து வெங்காயச் சங்கம் வரையிலான மேற்படி வீதியைப் புனரமைப்பதற்கு குறைந்தது ரூபா 5லட்சம் தேவை என்றும் -

சம்பந்தப்பட்ட வீதியையும் இந்து மயானத்தையும் புனரமைப்பதற்கு பிரதேச செயலகத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி போதாது என்றும்- நீர்வேலி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-17)

# திட்டமிடல் பிரதிப் பணிப்பாளராக சிவபாதசுந்தரம் நியமனம்

யாழ்ப்பாணம்,ஏப்.12

யாழ்.செயலகத்தின் திட்டமிடல் பிரதிப் பணிப்பாளராக சமுர்த்தி அபிவிருத்தி உதவி ஆணையாளர் என். சிவபாதசுந்தரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சில வருடங்களாக செயலகத்தின் திட்டப் பணிப்பாளராகவும் பின்னர் திட்டமிடல் பிரதிப் பணிப்பாளராகவும் கடமையாற்றி வந்த எஸ்.மகாலிங்கம் கடந்த 5ஆம் திகதியுடன் ஓய்வுபெற்றதை அடுத்தே அரச அதிபரினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (எ-10)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.12

கரபந்தாட்ட மத்தியஸ்தர்களைத் தெரிவு செய்வதற்கான எழுத்து மற்றும் செய்முறைப் பரீட்சைகள் இம்மாதம் 30ஆம் திகதி நடைபெறவுள்ளன.

இப்பரீட்சைகளில் தோற்றுவோருக்கான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சென். ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் கடந்த மாதம் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்ற கரபந்தாட்ட பயிற்சி முகாமில் கலந்துகொண்ட அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட கரபந்தாட்டச் சங்கச் செயலாளர் சி.மனோகரன் கேட்டுள்ளார். (ஒ-5)

# மேதின ஏற்பாடு குறித்த கலந்துரையாடல்

2003ஆம் ஆண்டுக்கான மேதின நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல் பற்றி யாழ்.மாவட்ட மேதின ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

மேற்படி கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு யாழ். நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசசார்பற்ற மற்றும் கல்வி, வர்த்தக, போக்குவரத்து, கூட்டுறவுத் துறையினர், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்களின் உறுப்பினர்கள் ஆகியோரை இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி)

# யோகர் சுவாமியின் குருபூசை நிகழ்வு

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினரால் இன்று உடுவில் கடவுள் சந்நிதி இல்லத்தில் யோகர் சுவாமிகள் குருபூசை கொண்டாடப்படவுள்ளது. இந்நிகழ்வில் சங்கீதபூஷணம் திருமதி ஞானகுமாரி சிவநேசனின் பஜனை, பேச்சு என்பனவும் இடம்பெறும். (எ-152)

## நாடளாவிய ரீதியில்

# தொற்றுநோய் பரவும் ஆபத்து: சுகாதார அமைச்சு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.12

நாடளாவிய ரீதியில் தொற்றுநோய்கள் பரவும் ஆபத்து அதிகரித்து உள்ளது என்றும் -


அதனை உடன் கட்டுப்பாட்டுக்கு கொண்டுவர அனைத்து சுகாதார நிறுவனங்களும், சுகாதார வைத்திய அதிகாரிகளும் விழிப்பாக இருக்க வேண்டும் என்றும் - சுகாதார நலனோம்பு அமைச்சு சுற்றறிக்கை மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுகுறித்து மேற்படி அமைச்சு அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தற்போது பொக்கிளிப்பான், கூகைக்கட்டு முதலிய நோய்களின் தாக்கம் தீவிரமடைந்துள்ளது.

எனவே, அனைத்து சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்படி நோய்களைக் கண்டறிந்து அவற்றைத் தீர்க்க உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேற்படி நோயின் தாக்கம் இனங்காணப்பட்டால் அது தொடர்பான விவரங்களை சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு அறியத்தரவேண்டும் - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-185)



அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கலாசார மண்டபத் திறப்புவிழா நாளைமறுதினம் புது வருடப் பிறப்பன்று நடைபெறவுள்ளது.

பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ள திறப்பு விழாவில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மண்டபத்தைத் திறந்துவைக்கவிருக்கிறார்.

இந்த வைபவத்தில் கௌரவ விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.ஜி.கஜேந்திரகுமார் கலந்துகொள்வார். வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி, வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலாளர் க.கனகரத்தினம், இலங்கை மின்சாரசபை மின்பொறியியலாளர் எஸ்.வல்லிபுரம், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய கலாநிதி கதிரவேற்பிள்ளை ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகக் கலந்துகொள்வர். கலாசார மண்டபத்தின் தோற்றத்தைப் படத்தில் காணலாம். (ஐ)

# யாழ்.விவசாயிகளுக்கு உதவ பொருளாதார மையம்

## விரைவில் இங்கு நிறுவப்படும்

கொழும்பு,ஏப்.12

விவசாயிகளுக்கு உதவும்முகமாக பொருளாதார மையம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் உருவாக்கவுள்ளதாக இலங்கை கிராமிய பொருளாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தப் பொருளாதார மையம் மூலம் விவசாயிகள் தங்கள் விளைபொருள்களுக்கு நியாயமான விலையைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று கிராமிய பொருளாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய பொருளாதார மையத்தின் மூலம் இடைத்தரகர்களின் தலையீடு குறைக்கப்பட்டு விவசாயிகள் நியாயமான வருவாயைப் பெறக்கூடியதாக இருக்கும் எனவும் இந்த மையத்திற்கான இடம் விரைவில் தெரிவு செய்யப்படவிருப்பதாகவும்-

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இந்த மையம் திறந்துவைக்கப்படும் எனவும் - தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-12)

# சத்தியசாயி சமித்தியில் இலவச பயிற்சி நெறிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்.ஏப்.12

பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் பெண்களுக்கான தையல் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்த வகுப்பு திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாள்களில் நடைபெறும்.

ஆண்களுக்கான வாத்திய வகுப்பு அங்கு ஆரம்பிக்கப்படவுள்ளது சனி, ஞாயிறு ஆகிய நாள்களில் நடைபெறும்.

மேற்படி இப்பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ள விரும்புவோர் 14.04.2003 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ அல்லது தபால் மூலமோ விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பிக்கவேண்டிய முகவரி: பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையம், இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (ஐ)

## மத்திய மாகாண கல்வித் திணைக்கள மோசடி:

# முன்னாள் தலைமைக் கணக்காளர் பொலீஸாரால் விசாரணைக்கு கைது!

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்தில் நடைபெற்றிருப்பதாகக் கூறப்படும் 10 கோடி ரூபா மோசடி தொடர்பாக அத்திணைக்களத்தின் முன்னாள் தலைமைக் கணக்காளர் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் குற்றப் புலனாய்வுப் பொலீஸாரினால் விசாரணை செய்யப்பட்டு வருகின்றார்.

குற்றப் புலனாய்வுப் பொலீஸாரின் அறிவித்தலையடுத்து குற்றப் புலனாய்வுப் பொலீஸ் தலைமையகத்தில் அவர் ஆஜராகியிருந்த போது, அவர் விசாரணைக்காக கைது செய்யப்பட்டார் என பொலீஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

இம்மோசடி குறித்து ஆராய்ந்து வந்த உதவிக் கணக்காய்வு அதிகாரி லலித் அம்பன்பொல மீது அசிட் வீசப்பட்டதையடுத்து சந்தேகநபரான தலைமைக் கணக்காளர் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருக்கிறார்.

மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் வேறு சில அதிகாரிகளும் விசாரணைக்காகக் கைது செய்யப்படவிருக்கின்றனர் என்றும் குற்றப் புலனாய்வுப் பொலீஸ் அதிகாரி ஒருவர் கூறியிருக்கின்றார். (எ)

# ஸ்கை எலக்ரோனிக் சிஸ்ரம்



ஸ்கை எலக்ரோனிக் சிஸ்ரம் நிறுவன அனுசரணையுடன் பாரதி விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட உதைபந்தாட்ட இறுதித் தெரிவுப் போட்டியில் வெற்றிபெற்ற இளவாலை ஹென்றிஸ் கழகத் திற்கு, ஸ்கை நிறுவன உரிமையாளர், விழாவில் சிறப்பு விருந்தினரா கக் கலந்துகொண்டு பரிசிலை வழங்கிக் கௌரவித்தார். ஸ்கை நிறுவன உரிமையாளரையும் வெற்றிபெற்ற கழகத்தையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*வட்டுக்கோட்டை.* (16630) - பாரதி விளையாட்டுக் கழகம்.


## மிதிவெடி வெடித்து தொழிலாளி காயம்

யாழ்ப்பாணம்,ஏப்.12

சுற்று மதில் கட்டுவதற்கான அத்திவாரம் அமைக்கக் குழி வெட்டியபோது பிக்கான் மிதிவெடியில் பட்டு அது வெடித்ததில் தொழிலாளி ஒருவர் காயமடைந்தார்.

கடந்த வியாழன்று கலட்டியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் புதுமடம், மானிப்பாயைச் சேர்ந்த சின்னத்துரை சுரேந்திரன் (வயது 19) என்ற இளைஞனே காயமடைந்தார்.

சம்பவம் இடம்பெற்ற பிரதேசம் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் துப்பரவு செய்யப்பட்டு மிதிவெடி அற்ற பகுதியென உறுதிப்படுத்தப் பட்ட பகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

(ம-12)


**ஏசியன் கல்வி நிலையம்**

மீசாலை

**O/L DAY CLASS**

ஆரம்பமாகிவிட்டது.

(16696)






RG

HERO HONDA World No. 1 Two-Wheeler Company

# இரத்தினகோபால்ஸ்

63, 65, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

(C/27237)


# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## கேள்வி அறிவித்தல்

| | |
|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி | : 2003.04.28 பி.ப. 3.00 மணிவரை |
| கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி | : 2003.04.29 பி.ப. 12.00 மணிவரை |
| கேள்விப்பத்திரம் திறந்து பார்க்கப்படும் திகதி | : 2003.04.29 பி.ப. 2.00 மணி |

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர வைப்புப்பணம் (வற் வரி அறவிடப்படும்). |
|---|---|---|
| மருதனார்மடம் பொதுச்சந்தைகள் கழிவகற்றுகல் அமைத்தல் | 2,500.00 | 300.00 |

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களின் மூலப்பிரதியை 'செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்' என்ற முகவரிக்கும் அதன் பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்கும் உரிய காலத்திற்கு முன்னர் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப் படல் வேண்டும். கடித உறையின் மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர் அலுவலக நேரத்தில் சபையினர் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு:- 2003ஆம் ஆண்டு ஒப்பந்தகாரராகப் பதிவுசெய்தவர்களுக்கு மட்டும் ஒப்பந்தப் பத்திரம் வழங்கப்படும்.

ந.சிவபாலதருமகுலசிங்கம்,
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

*வலி.தெற்கு பிரதேச சபை,*
*சுன்னாகம்.*
2003.04.10

(சி-27318) (C/27318)


# சாவகச்சேரி அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தானம்

அம்பிகையின் அடியார்களே,

புதுவருடமன்று நாளைமறுதினம் திங்கட்கிழமை அடியார்களின் வசதியை முன்னிட்டு மேற்படி தேவஸ்தானம் அதிகாலை ஐந்து மணிமுதல் திறந்திருக்கும். அன்றைய தினம் விசேட பூசையும், அர்ச்சனைகளும் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது.

மருத்து நீரும் பெற்றுக்கொள்ளலாம்.

அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்

*சாவகச்சேரி.* (16686) - தேவஸ்தான தர்மகர்த்தா



பொங்கிடும் புது வருடத்தில் மங்கல ஆரம்பம்

# RL ராஜ் லங்கா ருவர்ஸ்

விமானப் பயணிகளின் பயண ரிக்கெட்டுகள் ஒழுங்கு செய்வதில் முன்னோடிகள்

ராஜ் லங்கா ருவர்ஸ்

வெளிநாடு செல்வதற்கு வழி தெரியாது தவிக்கும் நீங்கள் நம்பிக்கையுடன் உங்கள் பயணம் தொடர ஒருமுறை நாடுங்கள்:

ராஜ் லங்கா ருவர்ஸ்

உங்கள் விமான ரிக்கட்டுகளுக்கும் வெளிநாட்டுப் பயணம் நம்பிக்கையுடன் சிறக்கவும் ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

தொடர்புகளுக்கு:

ராஜ் லங்கா ருவர்ஸ்

220A, 2ஆம் குறுக்குத்தெரு
ஆஸ்பத்திரி வீதி வழியாக,
யாழ்ப்பாணம்.
T.P. : 021 222 2273
Hot Line : 0777686161

(16679)



# இலங்கை வங்கி

மலரும் புத்தாண்டில் சகலருக்கும் மங்களமும் சுபீட்சமும் உண்டாகுக!

புத்தாண்டு தினமான 14.04.2003 திங்கட்கிழமை புதுவருடக் கொடுக்கல் வாங்கல்களுக்காக எமது சகல கிளைகளும் பி.ப. 3.00 மணியிலிருந்து பி.ப. 5.00 மணிவரை திறந்திருக்கும் என சகலருக்கும் அறியத் தருகின்றோம்.

அன்றைய எமது விசேட சேவைகள்:

- ✯ புத்தாண்டு தினத்தன்று பணம் வைப்புச் செய்யும் அனைவருக்கும் கைவிசேடம் வழங்கப்படும்.
- ✯ அன்றைய தினம் சேமிப்புக்கணக்குகள், 18+ மற்றும் மூத்த குடிமக்களுக்கான கணக்குகள் உட்பட சகல வைப்புகளும் ஆரம்பிக்கப்படும்.
- ✯ ரூ. 2,500/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்பவர்களுக்கு விசேட பரிசுச் சீட்டிழுப்பு மூலம் பரிசுகள் வழங்கப்படும்.
- ✯ ஏப்ரல் 14 முதல் மே 13 வரை ஆரம்பிக்கப்படும் சகல நிலையான வைப்புகளுக்கும் அதிக வட்டி வழங்கப்படும்.

மேலும் வாடிக்கையாளரின் நலன் கருதி புத்தாண்டுக்கு முன்தினமான 13.04.2003 ஞாயிற்றுக்கிழமை கீழ்க்கண்ட எமது கிளைகள் காலை 8.30 மணிமுதல் நண்பகல் 12.30 மணிவரை திறந்திருக்கும்.

- ☆ யாழ். மேற்றரக் கிளை
- ☆ பருத்தித்துறைக் கிளை
- ☆ சுன்னாகம் கிளை

உயர்விலும் தாழ்விலும்
உங்கள் உற்ற நண்பன்

(சி-27317)



# முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

12.04.2003




## உ. கவிநிலவன்

முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும் இல. 48, ஸ்ரீ வெங்கடேசன் வீதி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. திருமதி உதயராஜா - சுபாஜினி தம்பதிகளின்

செல்வப் புதல்வன் கவிநிலவன்

தனது முதலாவது பிறந்த நாளை இன்று (12.04.2003) சனிக்கிழமை தனது தற்காலிக இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை பன்றிக்கோட்டுப் பிள்ளையாரின் துணையோடு நோய் நொடியின்றி சகல செல்வங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துபவர்கள்: அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, அம்மப்பா, அச்சா மாமா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா குடும்பம் (கனடா), சித்தப்பா குடும்பம் (முல்லைத்தீவு), அத்தை குடும்பம் (நோர்வே), பாட்டி மற்றும் உற்றார், உறவினர்கள்.

*48, ஸ்ரீ வெங்கடேசன் வீதி,*
*கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.*

திரு. திருமதி உதயராஜா
(அப்பா - அம்மா)

(16670)

# குறைந்த விலையில் தரமான பொருள்கள் ஒரே கூரையின் கீழ் !

## முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட

# Annai Nagaa Food City

## பண்டிகைக்கு, தினசரி தேவைகளுக்கு எங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்.

- ☆ காய்கறி வகைகள்
- ☆ உள்நாட்டு, வெளிநாட்டு பழவகைகள்
- ☆ மீன் வகைகள்
- ☆ இறைச்சி/பொதி செய்யப்பட்ட இறைச்சி வகைகள்
- ☆ ஐஸ்கிறீம் வகைகள்
- ☆ பால்மா வகைகள்
- ☆ பழப்பானங்கள்
- ☆ சிகை அலங்காரப் பொருள்கள்
- ☆ வாசனைப் பொருள்கள் (சென்ற் வகைகள்)
- ☆ மளிகைப் பொருள்கள்
- ☆ வீட்டுப்பாவனைப் பொருள்கள்
- ☆ தங்க ஆபரணங்கள்
- ☆ மருந்து வகைகள்

மேலும் பல.....

## புதுவருட அசத்தலான Offers

- ★ புது வருட விலைக் கழிவுகள்
- ★ புது வருட சலுகைகள்
- ★ ஒன்றை வாங்கி மற்றொன்றை இலவசமாக பெற்றுக் கொள்ளுங்கள்
- ★ புது வருடத்தில் பொன்னான வாய்ப்புக்கள்



**விரையுங்கள் !**

இச்சலுகை கையிருப்பிலுள்ள வரை மட்டும்.

Flex Graphic

**175, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

**தொ.பே. : (021) 2225515, (021) 2225223**

# பக்தி மணம் கமழச் செய்யும்
# காவடி மார்க்
## இல்லத்திலிருந்து

* சுகந்தம் குங்குமம்

(சுத்தமான மஞ்சள் கலந்த... பக்க விளைவுகளற்றது)

* சுகந்தம் திமர் சாம்பிராணி

(சிரட்டைகள் தேவையில்லை)

* சுகந்தம் சாம்பிராணித் தூள்

**நின்று நிலைக்கும் யோதி மயம்...காவடி மார்க் கற்பூரம்**




ஏக விநியோகஸ்தர்கள்:
**PRABA TRADING CO.**
31,31A, Gabos Lane, Colombo - 11
Tel: 422750, 329426

யாழ் விநியோகஸ்தர்கள்:
எஸ்.வி. முருகேசு
104, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

சந்தைப்படுத்துவோர்:
**P&A marketing Service**
Colombo - 6
Tel: 074 515975


# VACANCIES

**FRONT LOADER OPERATORS**

at *"HALO Trust"* a non govt. organisation engaged in humanitarian mine clearence.

**Requirements:**

Age : between 25 - 40 years.
Experience : 5 years experience in handling and operating front loaders.

Please send your Bio-data and relevant photo copys of documents and recommanditons to.

**The Programme Manager,**
**HALO Trust**
**655, Navalar Road, Jaffna.**
*on or before 22.04.2003* (G/27373)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons upto 28th April, 2003 for the undermentioned posts.

### FACULTY OF AGRICULTURE

♣ Asst.Lecturer (on contract)/Demonstrator (on contract) in Agricultural Biology

♣ Those who are awaiting the results of the examination may also apply.

| POST | SALARY SCALE |
|---|---|
| Assistant Lecturer (on contract) | Rs.10,800.00 p.m. (fixed) |
| Demonstrator (on contract) | Rs.9,000.00 p.m. (fixed) |

Application forms and other details may be obtained from the office of the **Assistant Registrar / Establishments, University of Jaffna, Sri Lanka** either in person or by sending a Money Order for Rs.20/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in fav- our of the **Bursar, University of Jaffna** togerther with a self addressed stamped envelope 23x10 cm in size.

Applicants from the University system/Goverment Departments/Corporations and Statutory Boards Should channel their applications through the Heads of respective institutions.

Aplicants received after the closing date will be rejected without intimation.

*2003.04.10* Registrar.

# யாழ்ப்பாணத்தில் சக்தி தரும் சித்திரை விழா - 2003

# யாழ். மக்களுக்கான போட்டிகள்

சக்தி TV FM

இன்று காலை - 6.30

**1. மரதன் ஓட்டம் 20Km** (வயதெல்லை இல்லை)
(வீதி ஓட்டம் ஆண்கள்) **(Road Race)**

★ இப்போட்டிக்கு விண்ணப்பித்தவர்கள் இன்று காலை 6.30 மணிக்கு யாழ்.நூலகத்துக்கு முன்பாக தங்களுக்குரிய இலக்கங்களைப் பெற்றுக் கொள்ளவும்.

**2.சைக்கிள் ஓட்டப்போட்டி 60Km**
(ஆண்கள்) (வயதெல்லை இல்லை)
நாளை காலை 6.30 மணிக்கு

வெற்றி பெற்றவர்களுக்கு
சிறந்த பரிசுகள் காத்திருக்கின்றன.

விண்ணப்பித்தவர்களுக்கான கூட்டம்
இன்று (12.04.2003) சனிக்கிழமை பி.ப.2.00 மணிக்கு
யா/மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

குறிப்பு:- ★ இராணுவத்தினர் மற்றும் பொலீஸ் உத்தியோகத்தர்கள் எவரும் இப்போட்டியில் பங்குபற்ற முடியாது.
*நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.*

"சக்தி மிக்கவர்களின் திறமையை வெளிக்கொணரும் சக்தி"

சக்தி FM
யாழ்ப்பாணம் - 91.5
கொழும்பு - 105.1

**நாளை - 13.04.2003 1மணிக்கு ஆரம்பம்**
**சித்திரை விழா பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள்**

| | |
|---|---|
| ★ தேசிக்காய் கரண்டி ஓட்டம் | (சிறுவர்கள்) |
| ★ விநோத உடைப் போட்டி | (சிறுவர்/பெரியோர்) |
| ★ யானைக்கு கண் வைத்தல் | (ஆண்/பெண்) |
| ★ கயிறு இழுத்தல் | (ஆண்கள் 8 பேர் குழு) |
| ★ சாக்கோட்டம் | (சிறுவர்/ஆண்கள்/பெண்கள்) |
| ★ முட்டி உடைத்தல் | |
| ★ பணிஸ் உண்ணல் போட்டி | (சிறுவர்) |
| ★ தடை தாண்டல் | |
| ★ மா ஊதல் போட்டி | (சிறுவர்/ஆண்கள்) |
| ★ தலையணைச் சண்டை | (ஆண்கள்) |
| ★ தேங்காய் திருவுதல் போட்டி (திருவலகையுடன் வரவும்) | (பெண்கள்) |
| ★ தண்ணீர் நிரப்பும் போட்டி | (ஆண்கள்/பெண்கள்) |

ஊடக அனுசரணை உதயன்

மேலதிக விவரங்கள் நாளைய உதயனில்...!

(சி-27350)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் தம்பிஐயா சிதம்பரப்பிள்ளை

*(ஓய்வுபெற்ற தபால் வீநியோகஸ்தர், வெற்றிலைக்கேணி)*

அன்னாரது அந்தியேட்டி வைபவம் இன்று (12.04.2003) சனிக்கிழமை பருத்தித்துறை நாகலிங்கமுதலி வீதியில் நடைபெறவிருப்பதனால் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(16720) - குடும்பத்தினர்.

---

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய

## மணவாளக் கோலம்

மேற்படி ஆலயத்தின் மணவாளக் கோலம் 13.04.2003 ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணிக்கு அம்பாளுக்கு (108) சங்காபிஷேகமும் பரிவார மூர்த்திகளுக்கு விஷேச அபிஷேகமும் நடைபெற்று மாலை 5.00 மணிக்கு அம்பாள் வெளிவீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும்.

குறிப்பு: அன்று மத்தியானம் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப் படும்.

(C/27380) -ஆலய பரிபாலன சபையினர்.

---

## RAM CD WORLD இன் புது வருட மலிவு விற்பனை

புதுவருடத்தை முன்னிட்டு 10.04.2003 முதல் 14.04.2003 புதுவருடம் வரை பின்வரும் விலைகளில் CD களை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

ஓடியோ CD —100/=
*(புதிய, பழைய)*
வீடியோ CD (பாடல்)—120/=
வீடியோ CD (படம்) — 225/=

ராம் CD வேல்ட்
220, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(16706)

---

## தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கம், கைதடி
## வாகன சுத்திகரிப்பாளர் பதவிக்கான வெற்றிடம் -314 -16

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:**

அ) கூ.ச.ஊ. 17 ஆம் சம்பளத் திட்ட பதவியொன்றில் 01 வருடத்திற்கு குறையாத அனுபவம்

அல்லது

ஆ) 5 ஆம் வகுப்பு, கல்விச் சான்றிதழ், நல்ல தேகாரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும்.

வயது: 18 - 45 ஆகும். ரொக்கம்: 5000/=
விண்ணப்ப முடிவு திகதி: 22.04.2003

சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். வேறு சங்கத்தில் கடமையாற்றுபவர்கள், தங்கள் விண்ணப்பங்களை தங்கள் சங்கம் மூலம் சிபார்சு பெற்று விண்ணப்பிக்கவும். விண்ணப்பப் படிவம் மற்றும் விவரங்களை சங்கத்தில் பெற்று விண்ணப்பிக்கவும்.

*தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.ச.,*
*கைதடி.* (சி-27374) பொதுமுகாமையாளர்.

---

## தேவை

நியூ பாலகிருஷ்ணன் ஸ்ரோர்ஸ் எனும் கொக்கா கோலா மென்பான விநியோக நிறுவனத்திற்கு

★ நிர்வாக இயக்குநர்
★ றைவர்

அமைய அடிப்படையில் தேவை

*குறிப்பு:-* சிங்களம் சரளமாகப் பேசக்கூடியவராகவும் அனுபவம் வாய்ந்தவராகவும் இருத்தல் வேண்டும்.
16.04.2003 காலை 10 மணிக்கு சகல ஆவணங்களுடனும் நேரில் சமுகம் தரவும்.

தொடர்பு:
164, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
*(வைத்தீஸ்வராச் சந்திக்கும் யாழ்.வணிகர்கழக காரியாலயத்திற்கும் இடையில்)* (16711)

---

## "வெளிவந்து விட்டது"

அடிப்படைக் கணக்கீட்டு கோட்பாடுகளும் நியமங்களும்
By:-A.KALAICHELVEN B.Com. (sp.)
2003, 2004 மாணவர்கள் பின்பற்ற வேண்டிய நவீன எண்ணக் கருக்களுடன் யாழ்.பிரபல புத்தக சாலைகளில் இன்றுமுதல்.
(16713)

---

## தவறிவிட்டது

தங்கச் சங்கிலி (கைச்செயின்) நேற்று (10.04.2003) இல் யாழ். நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

திரு.வை.செல்வரட்ணம்
29, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.
T.P: 0777 115625
(16719)

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

**O/L DAY CLASS (8.30-2.30)**

- பிரிவு 2 இற்கான அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.
- பிரிவு 3 இற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
- பிரிவு 4 மிக வெகு விரைவில
- சென்ற வருடம் போல் இம்முறையும் 6 பிரிவு மட்டுமே.

(16694)

---

மீண்டும் **O/L** எடுக்கும் மாணவர்களுக்கு!
ஓர் அரிய சந்தர்ப்பம்
சனி, ஞாயிறு விசேட பிரிவு 1
ஆரம்பம்: 13.04.2003 (8.30 - 2.00)

## விக்னா கல்வி நிறுவனம்

(16695)

---

**ராஜா** யாழ்ப்பாணம்

ஸ்ரீகாந்.பூமிகா, விவேக், ராதிகா
**ரோஜாக்கூட்டம்**
10.30, 2.30, 6.30
**HOLLOW MAN**
இரவு 9.30 மட்டும்
புதுவருட வெளியீடு - **அரசு**

---

**நிறைஞ்சனாஸ்** சுன்னாகம்

கா.நேரம்:- 11.00, 2.45, 6.00 (பு.நே.)
பாடசாலை மாணவர்கள் பார்த்து மகிழக்கூடிய படம
**JURASSIC PARK 3**
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
**BEST OF THE BEST**
14 ஆம் திகதி முதல் **ரமணா**

---

**நாகம்ஸ்** சுன்னாகம்

விஜய், ஸ்நேகா, ரகுவரன நடித்த
**வசீகரா** (தினசரி)
14 ஆம் திகதிமுதல்
என்றென்றும் காதல்
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நேரம்)
(16698)

---

**லஷ்சுமி** இணுவில்

அர்ஜுன், மீனா, ரம்பா, ஆனந்தராஜ் நடித்த
**செங்கோட்டை** (தினசரி)
தினசரி 11.00, 3.00, 7.00 (பு.நேரம்)

---

# சித்திரைப் புத்தாண்டின் சிறப்புத் தள்ளுபடி

உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத் தொடர்புகளுக்கும்
**INTERNET BROWSING**
செய்துகொள்ள
விசேட சலுகைக் கட்டணத்தில்
ஏப்ரல் 07 முதல் ~ ஏப்ரல் 13 வரை.
மேலும் விவரங்களுக்கு:
**SRI MURUGAN**
**Tele Communication & Agency Post Office**
303, K.K.S. Road, Jaffna
T.P. 021 - 222 2670, 021 - 222 3588
Fax: 021 - 222 3214
E - mail del-smskr@eureka.lk

---

# பாம்பன் அருகே ஒதுங்கிய படகு

ராமேஸ்வரம்,ஏப்.12

பாம்பன் அருகே மர்மப் படகு ஒன்று கரை ஒதுங்கியது. இதனால், பெரும் பர பரப்பு ஏற்பட்டுள்ளது. பாம்பனுக்கும் சின்னப்பாடு என்ற இடத்திற்கும் இடையே கடற்பகுதியில் சுமார் 22 அடி நீளமுள்ள இந்த பிளாஸ்டிக் படகு வியாழன் பிற்பகல் கரை ஒதுங்கியது. இந்தப் படகில் இலங்கை போராளிகள் யாராவது வந்தார்களா? அல்லது இலங்கை மீன வர்கள் வந்தனரா? என்பது தெரிய வரவில்லை.

---

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்தியராகக் கடமையாற்றும் திருமதி டாக்டர் கணேசமூர்த்த அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி நாகபாக்கியம் பொன்னுத்துரை**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தின் துயரில் நாமும் பங்கெடுக்கின்றோம்.

*அரச முதியோர் இல்லம்,* அதிபர்,உத்தியோகத்தர்கள்,
*கைதடி.* (16714) முதியோர்கள்.

---

# மரண அறிவித்தல்கள்

## இராசையா சுப்பிரமணியம்

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டத்தை வசிப்பிடமாகக் கொண்ட இராசையா சுப்பிரமணியம் நேற்று (11.04.2003) வெள்ளிக்கிழமை இரவு தனது 102ஆவது வயதில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மீனாம்பாளின் கணவரும் காலஞ்சென்றவர்களான இராசையா - இராசம்மா தம்பதிகளின் புதல்வனும் சரஸ்வதி, காலஞ்சென்ற சிவபுண்ணியம் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் மாமனாரும் இந்திராணி (பிரான்ஸ்), சறோஜினி (பிரான்ஸ்), செல்வராணி, கிருபாகரன் (பிரான்ஸ்), லோதீஸ், லோகநாதன், மரியநாயகம் (பிரான்ஸ்), வடிவேல் (சொக்கர் கடை), கலைமகள் (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் தபோதனன், மதனி, மதுரா, மதன், கிங்சிலி, லூட்சிகா, கிறோஷான், நிரோஷான், ஷாருகா, சுபலக்ஷன், அபிலக்ஷந் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2003) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
*93/4, இராசாவின் தோட்டம்,* சரஸ்வதி (மகள்)
*யாழ்ப்பாணம்.* (16722) வடிவேல் (பேரன்)

## நடராஜா ஐயர் விவேகானந்த ஐயர்

(இளைப்பாறிய ஆசிரியர்)

புதுக்குளங்கரை அல்வாயைச் சேர்ந்த விவேகானந்த ஐயர் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2003) சனிக்கிழமை 12.00 மணியளவில் இல்லத்தில நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
ப.பாலகுமார்
*அல்வாய்.* (C-27378) (பேறாமகன்)

## கார்த்திகேசு கந்தையா

(K.K.சவாரி வண்டில்)

சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கார்த்திகேசு கந்தையா நேற்றுக் காலமாகிவிட்டார்.

அன்னார் மாணிக்கம், ஆறுமுகம், தங்கச்சிப்பிள்ளை, காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் நல்லையா அவர்களின் மைத்துனரும் சிவநேசன் (கனடா), ஞானம்பிகை (டென்மார்க்), செந்தாமரை ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2003) நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடிநிலை மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*சுழிபுரம் கிழக்கு,* க.நல்லையா
*சுழிபுரம்.* (C-27381) (மைத்துனர்)

## சின்னத்தம்பி சுப்பையா

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் காவில்வயல் கரணவாயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுப்பையா அவர்கள் 09.04.2003 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னத்தம்பி - வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மகனும் சரஸ்வதி அவர்களின் அன்புக் கணவரும் தெய்வநாயகியின் அன்புத் தந்தையும் சுப்பிரமணியம் (நெதர்லாந்து) அவர்களின் அன்பு மாமனாரும் சுஜிதா, சுமிதா, சுஜிகரன், சுகன்னியா, சுஜீவா ஆகியோரின் அன்புப் பேரனும் முத்தையா, செல்லத்துரை, தர்மலிங்கம், சிவபாக்கியம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் . அவரது இல்லத்தில் நாளை (13.04.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக வெல்லங்கிராய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*காவில் வயல்,*
*கரணவாய் தெற்கு,* தகவல்:
*கரவெட்டி.* (சி-27382) சுப்பிரமணியம் (மருமகன்)

## B.A.முருகேசம்பிள்ளை வள்ளியம்மை

காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாகவும் கருங்காலியில் வசித்த வரும் தற்போது புதுக்குடியிருப்பில் வசிப்பவருமாகிய முருகேசம்பிள்ளை வள்ளியம்மை நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசம்பிள்ளை (B.A.) அவர்களின் அன்பு மனைவியும் விஸ்வநாதன் (முன்னாள் கொள்வனவு உத்தியோகத்தர், காரைநகர் ப.நோ.கூ.ச.), திருநாவுக்கரசு (விற்பனையாளர், காரைநகர் ப.நோ.கூ.ச.) ஆகியோரின் அன்புத் தாயாரும் மேனகை, காந்திமதி ஆகியோரின் அன்பு மாமியாரும் கிருஷ்ணவேணி, குகநேசன், பாலேந்திரன், சிவாணி ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, புதுக்குடியிருப்பு இரணைப்பாளை இந்து மயானத்தில் இன்று (12.04.2003) தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*கருங்காலி,* மு.விஸ்வநாதன்
*காரைநகர்.* (16721) (மகன்)

# ஈ.பி.டி.பி. உறுப்பினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
4ஆம் திகதி மல்லாகத்தில் உள்ள எமது அலுவலகத்தில் இருந்து காணா மற்போன ராசன் என்ற எமது உறுப்பினர் பின்னர் மலக்குழியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார். இவரின் மரணத்துக்கும் புலிகளே காரணகர்த்தாக்கள் என்பது புலனாகின்றது என்று தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் சிறையில் இருந்து தப்பி வந்த எமது உறுப்பினர் விடயமாக நாம் முறைப்பாடு செய்துள்ள போதிலும் எமக்கு இதுவரை எவ்வித பதிலும் தரப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

புதுக்குடியிருப்பு, வல்லிபுரம் என்ற இடத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் பாதாளச் சிறையில் எமது உறுப்பினர்கள் மட்டுமன்றி மாற்றுத் தமிழ்க் குழுக்களின் உறுப்பினர்களும் அரச படையினரும் தடுத்துவைக்கப்பட்டிருப்பது தெரியவருகின்றது. புலிகளின் நீதி நிர்வாகப் பொறுப்பாளர் 800 பேரை இவ்வாறு தடுத்து வைத்துள்ளார் என்று சிவதாசன் குற்றஞ்சாட்டினார்.

இந்த மாநாட்டில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களான நெல்சன், ஜெகன், பாலா, தவராசா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

**ஆசிரியர் குறிப்பு:**

1. மொட்டையாக 'சந்திரன்' என்ற ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டு இந்த விடயத்தில் உதயனையும் சம்பந்தப்படுத்தி ஈ.பி.டி.பி. குற்றம் சுமத்தியிருக்கின்றது.

2. சம்பந்தப்பட்ட நபரின் முழுப் பெயர், விவரம், ஊர், விலாசம் அத்தகைய நபர் எவரும் தற்போதும் உதயனில் பணியாற்றுவாராயின் உதயனில் அவரின் பதவிநிலை அல்லது ஆகக்குறைந்தது அவர் பணிபுரியும் பிரிவு, சம்பவம் நடந்ததாக ஈ.பி.டி.பி. கூறும் காலத்தில் அத்தகைய நபர் எவரும் உதயனில் பணிபுரிந்தார் என்பன நிருபிக்கும் ஏதேனும் ஆதாரங்கள் (ஆதாரங்கள் இல்லாவிட்டால் வெறும் தகவல்களாவது), அத்தகைய நபருக்கும் உதயனுக்கும் உள்ள தொடர்பு என்பவற்றை ஈ.பி.டி.பி. பகிரங்கப்படுத்தியிருந்தால் இக்குற்றச்சாட்டில் அடிப்படை ஏதும் இருந்திருக்கும்.

3. பலத்த சர்ச்சையை ஏற்படுத்தக் கூடிய பெரிய குற்றச்சாட்டு ஒன்றுடன் உதயனைத் தொடர்புபடுத்தி, பத்திரிகையாளர் மாநாட்டில் பகிரங்க அறிவிப்பு விடுத்திருக்கும் ஈ.பி.டி.பி., மேற்படி தகவலில் எவற்றையேனும் வெளியிடுமா எனப் பகிரங்கமாகக் கோருகின்றோம்.

4. அரசியல் உட்பட பலவிடயங்களில் கூலிக்குக் காட்டிக்கொடுப்பது - பல சமயங்களில் இனத்தையே காட்டிக்கொடுப்பது - பாதை பிறழ்ந்த முன்னாள் போராட்ட சக்திகளின் போக்காக இருக்கலாம்.

ஆனால், உதயனோ அல்லது அதன் பொறுப்பான ஊழியர்களோ காட்டிக்கொடுக்கும் செயலை - அவர்கள் துரோகிகளாக இருந்தாலும் கூட - செய்யாது, செய்யமாட்டார்கள் என்பதை வாசகர்களுக்கு உறுதிகூறுகிறோம். நெறிபிறழா உதயனின் போக்கும் செயல் நேர்மையும் ஈழத்தமிழர்களுக்கு நன்கு தெரிந்தது; புரிந்தது.

சில குழுக்கள் தங்களது அரசியல் வங்குரோத்துத் தனத்தில் இருந்து தங்களை விடுவிக்கவும், தங்களின் குறுகிய அரசியல் நோக்கங்களை எட்டுவதற்காகவும் உதயனின் நேர்மையைச் சீண்டிப்பார்ப்பது சகிக்கமுடியாதது.

மக்களின் விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்தவர்கள், காட்டிக்கொடுப்பதற்காக அன்னியசக்திகளுடன் தோலுக்குமேல் கைபோட்டு தோழனாய் நிற்பவர்கள் என்றெல்லாம் மக்களின் குற்றச்சாட்டுக்கு இலக்கானவர்கள் இப்போது மக்களின் கவனத்தை அதிலிருந்து திசைதிருப்பச் செய்து, தாம் தப்புவதற்காக இத்தகைய அபாண்டமான பழியை உதயன் மீது சுமத்தப்பார்க்கின்றார்கள் எனக் கருதுகின்றோம்.

5. புலிகள் மீதான இந்தக் குற்றச்சாட்டு குறித்து மக்களிடையே நம்பகத்தன்மையை ஏற்படுத்துவதற்கு முன்னர், காட்டிக்கொடுத்தவர் (அப்படி யாரும் உண்மையில் இருந்தால்) அவர் உதயன் ஊழியர் என்பதை நிரூபிக்கும் - அல்லது அத்தகையவர் பற்றிய முழுத்தகவல்களும் பகிரங்கப்படுத்தும் -பொறுப்பு ஈ.பி.டி.பிக்கு உள்ளதென்று சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

அதில் தவறினால் அன்னிய சக்திகளின் 'டைரக்ஷனில்' நமது நாட்டிலே அரங்கேறும் மற்றொரு பிரசார நாடகமாகவே இக்குற்றச்சாட்டு மக்களால் கருதப்படும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறோம்.

(ஆ-ர்)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைச்சு அதிகாரிகளுடன் கலந்துரையாடினர்.

டென்மார்க்கின் வெளிநாட்டுக் கொள்கைகள் தொடர்பாக அந்நாட்டு வெளிநாட்டு அமைச்சின் அதிகாரிகள் விளக்கமளித்தனர்.

அத்துடன், அங்குள்ள உள்ளூராட்சி அமைப்புகள் மற்றும் டென்மார்க்கின் ஆட்சியின் கீழுள்ள கிறீன்ஸ் தீவின் அதிகாரிகளுடனும் விடுதலைப் புலிகளின் அரசியல் குழுவினர் கலந்துரையாடியுள்ளனர்.

டென்மார்க்கில் சுற்றுப்பயணம் முடிந்ததும் இந்தக் குழுவினர் தாயகம் திரும்பவிருக்கின்றனர் எனவும் கூறப்பட்டது.

(ஒ-4)

## சிறுவர் உரிமையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆபத்தான தொழில்களில் ஈடுபட்டுள்ள சிறுவர்கள், ஆதரவற்ற சிறுர்கள், ஆள்சேகரிப்பில் ஈடுபட முன்வந்த சிறுவர்கள் போன்றோரின் வாழ்வு நிலைகளை பழைய நிலைகளை பழைய நிலைக்கு கொண்டுவருவதற்குரிய திட்ட நடவடிக்கையின் வடிவங்கள் இதில் ஆய்வு செய்யப்பட்டன. பயிற்சிப்பட்டறையின் முடிவில் மேற்படி திட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. சிறுவர் உரிமைகளுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் காணப்படவேண்டிய நடத்தை, தராதரம் மற்றும் கொள்கை குறித்த தெளிவான தீர்மானப் பண்புகள் என்பன பற்றி மேற்படிதிட்டம் வலியுறுத்துகிறது.

இத்திட்டங்களில் பங்கெடுக்கும் அனைத்துத் தரப்பினரும் பக்கசார்பல்லாத நடுநிலைமைத் தன்மையை பேணி இந்த அனைத்துத் திட்டங்களும் வெற்றியளிக்க வழிசெய்யவேண்டும் என பயிற்சிப் பட்டறை குறித்து வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

(ஒ-3-4)

## வடக்கு - கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தயாரித்துள்ளது.

இந்த அறிக்கை கடந்த திங்கட்கிழமை அரசிடமும் விடுதலைப் புலிகளிடமும் கையளிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு தொடர்பான பல விடயங்களை இந்த அறிக்கை கொண்டிருப்பதால் நாட்டில் யுத்தத்தினால் நாசமடைந்த பிரதேசங்களின் உடனடித்தேவைகள் குறித்து ஆராய அது அவசியமானதாகும்.

நாடுமுழுவதிலும் வறுமை ஒழிப்பிற்கான இறுதித் திட்டம் தயாரிக்கப்படும்பொழுது இந்த மதிப்பீட்டு அறிக்கையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

எதிர்வரும் ஜூன் மாதத்தில் டோக்கியோவில் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்திலும் இந்தத் திட்டம் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது.

இந்த அறிக்கை பகிரங்கமாக வெளியிடப்பட்டு மக்களின் கருத்து அறியப்படும் என்றும் -

மக்கள் சமர்ப்பிக்கும் திருத்தங்கள் அதில் சேர்க்கப்படும் என்றும் - அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஒ-3)

## யுத்தநிறுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
களைத் தவிர்ப்பதற்கான யோசனைகள் அடங்கிய திட்டத்தினை அண்மையில் கண்காணிப்புக் குழுவினர் இரு தரப்பினரிடமும் கையளித்திருந்தனர்.

அந்தத் திட்டத்திற்கான தமது சிபாரிசுகளையே இப்பொழுது அரசாங்கம் வழங்கியிருக்கின்றது.

(ஒ-4)


## VACANCY FOR A MARKETING MANAGER

An excellent opportunity exist for a marketing Manager in a Multi Business organization in Jaffna. The ideal candidate Should be in the region of 35 to 45 years with Marketing qualifications and good educational background. Should be very fluent in English.

Remuneration includes salary plus commission, which is negotiable.

Apply with full details:

ADVERTISER,
Adv.No.:- 1845
C/o Uthayan Publication (Pvt.) Ltd.
361,Kasthuriar Road, Jaffna. (C/27363)

ITN SALES ITN SALES ITN SALES ITN SALES ITN SALES ITN SALES ITN SALES ITN SALES

ITN இன் மாபெரும் புதுவருட மலிவு விற்பனை

புதுவருடத்தை முன்னிட்டு பழைய, புதிய சினிமாப் பாடல்கள், பக்திப் பாடல்கள், கர்நாடக சங்கீதம், சமஸ்கிருத CDகள், VCDகள் மற்றும் MP-3 CDகள் அனைத்தும் மாபெரும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

* ஓடியோ வீடியோ CDகள் 90/- முதல்

"உங்கள் தெரிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்"

குறிப்பு: இச்சலுகையானது 14.04.2003வரை மட்டுமே

ITN வீடியோ ஓடியோ மியூசிக் சென்றர்
305, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி,
யாழ்ப்பாணம்.
(16717)

LIONAIR
LANKA'S PRIDE IN THE SKY
யாழ்ப்பாணம் – கொழும்பு – யாழ்ப்பாணம்
பாதுகாப்பான – சௌகரியமான பயணம்

★ பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்.நகருக்கும் யாழ்.நகரிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

★ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி சந்திக்கும் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

பதிவுகளுக்கு:
லயன்எயர் ரிக்கெற் அலுவலகம்
யாழ்ப்பாணம்
# 1-T, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0777-733992
(C/27281)

SUBRA(14)
சித்தன்கேணி
O/L Day Class
ஆரம்பம்: 14.04.2003
திங்கள் காலை 10.00
★ தினமும் காலை 8 - 1 மணிவரை வகுப்புகள்
★ மாதாந்தம் பயிற்சிப் பரீட்சைகள்
★ மாணவர்களின் வரவின்மை உடனுக்குடன் பெற்றோருக்கு அறிவிக்கப்படும்.
★ மாதம் ஒரு தடவை மாணவர் முன்னேற்றம் சம்பந்தமாக ஆசிரியர், பெற்றோர் கலந்துரையாடல்
★ கடந்தகாலப் பெறுபேறுகள் எமது திறமைக்குச் சான்று.
எம்முடன் இணைந்தோர் வெற்றி பெறுவர்.
(C/27228)

SPOKEN ENGLISH WITH GRAMMAR
LECTURES BY:
Mr.M.A.HARI
✪ புதிய பிரிவு ஆரம்பம் ✪
16.04.2003 புதன் மாலை 6 மணி
Wed. Mon. } 6p.m. - 7p.m.
HARY'S INSTITUTE
இல.564, கஸ்தூரியார் வீதி
(யாழ். இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகில்),
யாழ்ப்பாணம்.
(16662)

அனைத்து மாணவர்களுக்கும் விசேட கருத்தரங்கு
LOGIC
பிறைற்றின் கல்வி நிறுவனம்
சங்கத்தானை - சாவகச்சேரி
காலம்: 13.04.2003 9.00 a.m.
புதிய கல்வி நிறுவனம் - கிளிநொச்சி
காலம்: 15.04.2003 9.00 a.m.
By. P.கமல்
S.R.J.கதன்
★வினாத்தொகுப்புக்கள் வழங்கப்படும்.
(16650)


## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 1911 - 08 - 03



உதிர்வு 2003 - 03 - 15

### அமரர் வேலன் சின்னையா

எமது அன்புத் தந்தை இவ்வுலக வாழ்வினை நீக்கி இறைபதம் எய்திய செய்தி அறிந்து நேரில் வந்தோருக்கும் பத்திரிகை, துண்டுப்பிரசுரம் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (12.04.2003) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*நாகம்மாள் கோயில் வீதி,*
*உடுவில் கிழக்கு,*
*சுன்னாகம்.*

(16232) - குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### நாராயணபிள்ளை சிவசுப்பிரமணியம்

(மணியம் களஞ்சியம், கொடிகாமம்)

உசன், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாராயணபிள்ளை சிவசுப்பிரமணியம் 08.04.2003 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாராயணபிள்ளை - தங்கமலர் ஆகியோரின் அன்பு மகனும் மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான முருகேசு (C.T.B) - அன்னம்மா ஆகியோரின் மருமகனும் சீவரத்தினத்தின் அன்புக் கணவரும் கார்த்திகேசு (Ret. தபாலக ஊழியர்), சிவகுரு காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை ஆகியோரின் சகோதரனும் ராஜீவன் (நோர்வே), சுரேஸ்குமார்(J.T.I. நிறுவனம்), ராஜ்குமார் (லண்டன்), விஜிதா (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய ஆசிரியை), சுஜாதா (யூனியன் அஷ்யூரன்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் விக்ரிஸ்(நோர்வே), சாந்தி, பரம்தில்லைராஜன் (பளை மத்திய கல்லூரி ஆசிரியர்), குணரேகா, ஹரிகரன் (சுவீடன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சாமினி, கபிலா, கார்முகி, கபிலினி, விதுரஷன், யதுரஷன், பிரதீப்ராஜ், அபிராஜ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.04.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் ஈச்சங்காட்டு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சுரேஸ்குமார்** (மகன், J.T.I நிறுவனம்)
**ராஜீவன்** (மகன், நோர்வே)
**பரம்தில்லைராஜன்** (மருமகன், பளை மத்திய கல்லூரி)

*உசன்,*
*மிருசுவில்.* (c/27375)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.04.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## இடம்மாற்றம்

**ஜனா மருத்துவ நிலையம்,**

**ஜெயபுரம்**

என்னும் முகவரியில் இயங்கி வந்த
மேற்படி மருத்துவ நிலையம் தற்போது

**ஜனா மருத்துவ நிலையம்,**


**காங்கேசன்துறை வீதி, தாவடிச்சந்தி**

என்னும் முகவரிக்கு
இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை
அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

- நிர்வாகம்.

(சி-27372)

## ஓராண்டு நினைவலைகள்





| அமரர் | திருமதி |
|---|---|
| சுவாமிநாதர் பாலசிங்கம் | பாலசிங்கம் சிவபாக்கியம் |

23.02.1924 ⟵ தோற்றம் ⟶ 03.02.1930

19.12.2001 ⟵ மறைவு ⟶ 25.03.2002

**திதி : 12.04.2003 (சனி)**

தரணியிலே எம்மை பெற்றெடுத்த தெய்வங்களே!
தங்கள் நலம் பாராமல் எம்மை தலைநிமிர்ந்து நிற்க
கண்ணின் மணியாய் வளர்த்து
கட்டிஅணைத்து அமுது ஊட்டி,
சீரும் சிறப்புடன் எம்மையெல்லாம்
வாழ வகுத்த குலவிளக்குகளே!
உங்கள் அன்பு முகங்கள் எம்மை விட்டு பிரிந்தாலும்
உங்கள் பசுமையான நினைவுகள் என்றும்
எம்மை விட்டு பிரியாதிருக்கும்.
அன்னை! தந்தையே! ஆருயிர் தெய்வங்களே!

*உங்கள் ஆத்மா சாந்திடைய என்றும்*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*
*சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

தற்காலிக முகவரி:
*விதானையார் வீதி,*
*கண்டுக்குழி.*

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

## ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை மீளாய்வுக்கு விண்ணப்பிக்கலாம்

வலி.தெற்கு,ஏப்.12

2002ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் நடத்தப்பட்ட ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் மீளாய்வு செய்வதற்கு விரும்பும் பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை மே மாதம் 12ஆம் திகதிக்கு முன்பாக பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டுமென பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

ஒருவர் ஒரு பாடத்துக்கு விண்ணப்பிக்கும்போது நூறு ரூபா கட்டணமாகச் செலுத்தவேண்டும். ஒவ்வொரு பாடத்துக்கும் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டும் என்றும் - அவர் அறிவித்துள்ளார்.

பரீட்சைப் பெறுபேறுகளுடன் மீளாய்வு தொடர்பான அறிவுறுத்தலகளும், மாதிரி விண்ணப்பப் படிவமும் பாடசாலை அதிபர்களுக்கு பரீட்சைத் திணைக்களத்தால் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. (எ-152)

## பொது அறிவுப் போட்டி விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.12

கல்வி அமைச்சின் ஒத்துழைப்புடன் மக்கள் வங்கி 'சிசு உதான' கணக்கு வைத்திருக்கும் மாணவர்களுக்கு இடையில் நடத்தும் பொது அறிவுப் போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய முகாமையாளர் மு.க. சிவபாதவிருதயர் அறிவித்துள்ளார்.

பாடசாலை விடுமுறை காரணமாக அடுத்த மாதம் 30 ஆம் திகதி வரை விண்ணப்பங்களை அனுப்பிவைக்கலாம் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

மேற்படி போட்டி தொடர்பான மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர் அருகில் உள்ள மக்கள் வங்கிக்கிளை முகாமையாளருடன் அல்லது பிராந்திய தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் - அவர் அறிவித்துள்ளார். (எ-ரி)

## ஆபரணம் கண்டெடுப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.12

யாழ்.கஸ்தூரியார் வீதியில் உள்ள நகைக் கடை ஒன்றின் முன்பாக வீதியில் கண்டெடுக்கப்பட்ட ஒற்றைத்தோடு ஒன்று கன்னாதிட்டி காளி கோயிலின் செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் -

உரியவர்கள் தகுந்த ஆதாரங்களைச் சமர்ப்பித்து அதனைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## உறவுகளைச் சீர்ப்படுத்துவோம்!

உலகமயமாக்கலில் உருண்டு செல்லும் உலகினில், கடவுளின் திருவுளம் அணுவளவும் செயற்படுத்தபபடவில்லை. மனித உணர்வுகள் மதிக்கப்படவில்லை

காரணம், சீரற்ற சிந்தனையோடும், போலி அன்போடும் எதிர்நோக்கற்ற வாழ்க்கையுடனும் மனிதர்கள் உலக அரங்கிலே நடித்து வருகிறார்கள்.

பேணப்பட வேண்டிய உறவுநிலையும் அன்பு செய்யப்படவேண்டிய உள்

### தவக்கால சிந்தனை
**-39ஆம் நாள்-**

ளங்களும் ஆதரவற்று அலைகின்றன.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு யேசுநாதர், சர்வேசுரனின் உண்மையான நீதியின்படி எமது பாவங்களுக்காக கசப்புள்ள காடி நிறைந்த பாத்திரத்தைக் குடித்தார். யேசுகிறிஸ்து மாசற்றவராக இருந்தாலும் கூட தனது மந்தையாகிய எம்மேல் கொண்ட அளவற்ற அன்பின பொருட்டு தன்னை முழுவதுமாக சாவிற்கு கையளித்தார். அன்று அவர் எம்மோடு ஏற்படுத்திய அன்புறவு நிலை, இன்றைய எமது சமூகத்தில் எட்டாக்கனியாகி விட்டது. மற்றவரின் வளர்ச்சியிலும், உயர்ச்சியிலும் மகிழ்வு காணவேண்டிய நாமே பல வேளைகளில் அவனது வாழ்விற்குப் பாரிய தடைக்கற்களாக இருந்து அவனை இடறிவிழச் செய்கின்றோம்.

நண்பன் என்றும், நட்பு என்றும், சிநேகிதர் என்றும் சொல்லிக்கொண்டு கூட இருந்து குழிபறிக்கின்றோம்.

இதனைத்தான் சீராக் 12:15 கூறப்படுகின்றது. "பகைவர் உதட்டில் தேன் ஒழுகப் பேசுவர், உள்ளத்திலோ உனக்கு குழி பறிக்கத் திட்டமிடுவர். உனக்கு முன் கண்ணீர் சிந்துவர். வாய்ப்புக் கிடைக்கும் போது அவர்களது கொலை வெறி அடங்காது".

இவர்கள் மட்டில் நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இத்தகைய தீமைகள் மட்டில் எமது வாழ்வையும் விழிப்புடன் கொண்டு நடத்த வேண்டும்.

கிறிஸ்தவர்களாக வாழ அழைக்கப்பட்டுள்ள எமக்கு இரண்டகர்களின வாழ்வு ஒரு சவாலாக அமைகின்றது.

**செ.ஹெவினர் லி**

பரிசுத்த வாரத்துள் நுழையக் காத்திருக்கும் நாம் கடந்துசென்ற அருளின் காலத்தில் எம் உறவு நிலைகளை எவ்வாறு அமைத்துள்ளோம்?

அன்புக்காக ஏங்கும் நெஞ்சங்களின் ஏக்கங்களைப் புரிந்துள்ளோமா? சுமைகளால் சோர்ந்து வீழ்ந்தோரை தூக்கியுள்ளோமா? உயிர்த்துடிப்புள்ள உணர்வுகளை மதித்துள்ளோமா?

எமது வாழ்வினுள் ஆடிப்புகுந்து சிதறிய சிந்தைகளையும் உருமாறிய உறவுகளையும் இறை உறவில் இணைத்து ஒன்றித்த அன்பு மனங்களாய் பரிசுத்த பரமனின் சந்நிதி செல்வோம். ★

## தேவை

**பின்வரும் நூல்கள் ஆய்வு நோக்கத்திற்காகத் தேவைப்படுகின்றன. நூல்கள் கைவசம் வைத்திருப்போர் பின்வரும் தொலைபேசிக்கு அறிவித்தால் அந்நூல்களின் பிரயோசனங்களைப் பெற்றபின் நூல்கள மீள அளிக்கப்படும்.**

**நூல்கள்:**

1. வரலாற்றுக்கு முற்பட்ட தமிழர்
   ஆக்கியோன் திரு.கந்தையாபிள்ளை
2. இலங்கைச் சரித்திரம்
   ஆக்கியோன் அருட்சகோ. S.பிலிப்

தயவு செய்து உதவுங்கள்: நன்றி.

*தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்: 021-222 5173*

வேண்டுகோள் விடுப்பவர்:

**அருட்திரு எஸ்.ஏ.ஐ மத்தியூ, S.S.J,**
**கல்முனை.** (16678)

## இது உங்கள் குழந்தையின் எதிர்காலம் பற்றியது

**Baby.Com**

ஆம்!

இம்முறை மேலும் பல சிறப்பான திட்டங்களுடன் உங்கள் குழந்தைகளுக்கான எமது ஆய்வு

அடிப்படைக் கணனிப் பிரயோகத்துடன்
சிறுவர்களுக்கான

கார்ட்டூன் CDக்கள்
ஆங்கிலப் பாடல் CDக்கள்
Games CDக்கள்



**ஆரம்பம் : 12.04.2003**

*பதிவுகளிற்கு*
*STP Computer world (Pvt.)Limited.*
*Kantharmadam, Jaffna.*

விஞ்ஞான பீட வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சி நிதிக்காக யாழ். பல்கலைக்கழக மாணவர்களும், யாழ். - முன்னணி ஈழ நல்லூர் 'ராகம்ஸ்' இசைக் குழுவினரும் இணைந்து புது வருடத்தை முன்னிட்டு வழங்கும் -

## இராக சங்கமம்

| இடம் | காலம் | நேரம் |
|---|---|---|
| ✳ யா/இராமநாதன் கல்லூரி | 12.04.2003 | மாலை 6.00 மணி |
| ✳ இராஜலட்சுமி திரையரங்கு (நெல்லியடி) | 13.04.2003 | காலை 10.00 மணி<br>பி.ப. 2.30 மணி |
| ✳ கைலாசபதி கலையரங்கம் (யாழ். பல்கலைக்கழகம்) | 14.04.2003 | காலை 10.00 மணி<br>பி.ப. 2.30 மணி |

அன்பளிப்பு : 100/- 50/-

- விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம்.

பிரதான நிகழ்ச்சி அனுசரணை:

**✧ Annai naga Food City**
**K.K.S. Road, Jaffna.** (16710)

**✧ Serendib Express Air Line**
**No. 13, Power house Road, Jaffna.**

## 31ஆம் நாள் ஞாபகார்த்த அஞ்சலி



**அமரர்**

**திருமதி செல்லர் சின்னம்மா**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18.06.1928 | 13.03.2003 |

தாயாய், சேயாய், நல்ல மாமியாராய் வாழ்ந்து
மாயப் பிறப்பறுத்து விண்ணுலகில் வீற்றிருக்கும்
உங்களைப் பிரார்த்திக்கின்றோம்.

*நாகதம்பிரான் வீதி,*
*ஊரெழு மேற்கு,*
*சுன்னாகம்.* (16707)

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

## ஓராண்டு நினைவஞ்சலி

| மனம் மகிழ | மனம் நெகிழ |
|---|---|
| 12 - 03 - 1958 | 25 - 03 - 2002 |



**அமரர் மாணிக்கம் நவராஜா**

(பாதுகாவலர், வல்வை அரசினர் வைத்தியசாலை)

**(திதி : ஏகாதசி - 12.04.2003)**

தன்மானச் சிங்கமே தரணியின் செம்மலே
உன் மானம் காத்து ஊர்மானம் காத்தவனே
உன்னை இழந்து ஓராண்டு ஆகிவிட்டது - உனக்கு
என்ன நடந்தது என்று சொல்லவரமாட்டாயா?
சொன்னால் வேதனைஎன சொல்லாமலே இருந்துவிட்டாயா?

தகவல்:

*உச்சில் ஒழுங்கை,*
*கரவெட்டி தெற்கு.*
*கரவெட்டி.*

மனைவி - அன்னலட்சுமி.ந,
மகள்மார் - துவாரகா, துசிகா, துசிந்திகா,
மகன் - துதிபவன்,
மற்றும் உடன்பிறவா உதிரங்கள்.

(16709)

## மக்கள் நலன்காக்கும் பிரிவு அங்கத்துவத்தைப் புதுப்பித்தல்

மக்கள் நலன்காக்கும் பிரிவுடன் பல வெளிநாட்டு நிறுவனங்கள் இணைந்து பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த இருப்பதனால், எமது நிறுவனத்தில் ஏற்கனவேயுள்ள அங்கத்த வர்களும், கடன்பணத்தினைச் செலுத்த வேண்டிய அங்கத்தவர்கள் நிலுவைப் பணத்தினைச் செலுத்தியும் அங்கத்துவத்தைப் புதுப் பிக்குமாறும் புதிதாக இணைய விரும்புவர்கள் 25-04-2003 இற்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள் கின்றோம்.

இருபாலைச் சந்தி, கோப்பாய். (16680) - நிர்வாகம்.


## நிவாரண விநியோகத்தை ஆரம்பிக்கக் கோரிக்கை

பெப்ரவரி மாதத்திற்கான நிவா ரணப் பொருள்களை யாழ்.செயலகக் களஞ்சியத்தில் உடனடியாகப் பெற்று சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் அவற்றை மக்களுக்கு விநியோகிக்க ஏற்பாடு செய்யுமாறு கூட்டுறவுச் சங் கங்களுக்கு செயலக உதவித்திட்டப பணிப்பாளர் எஸ்.நல்லையா வேண்டு கோள் விடுத்துள்ளார்.

இதற்கான ஒதுக்கீடுகள் யாவும் ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டதாகவும்-

எனவே, தாமதிக்காது பொருள் களைப் பெற்று உடன் விநியோகிக்கு மாறும் அவர் சம்பந்தப்பட்டவர்களை கேட்டுள்ளார்.

இதேவேளை, நிவாரணப் பொருள் களைப் பெற்றுக்கொள்ளும் மக்கள் பால்மாவைப் பெற்றுக்கொள்ள விரும் பினால் அதற்கான விசேட ஏற் பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(எ-10)


## சேவையின் சிற்பிகள்

திரு.த.தங்கராஜா



உரும்பிராய் வடக்கு J/264 கிராம உத்தியோகத்தர்

திரு.வே.துரைசிங்கம்



மட்டுவில் நுணாவில் J/311 கிராம உத்தியோகத்தர்

இவர்கள் அண்மையில் கிராம உத்தியோகத்தர் தரம் Iஇற்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவர்களை உளமார உவகையுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். (16664) நவசக்தி சனசமூக நிலையம், உரும்பிராய்.


## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 22 - 05 - 1937

உதிர்வு 10 - 04 - 1995

### அமரர் ஆறுமுகம் ஜெயரத்தினம்

(முன்னாள் உதவி முகாமையாளர், இலங்கை வங்கி)

திதி: 12.04.2003

பாரினில் நாம் பாங்காய் வாழ
பாடுபட்ட நீங்கள்
பரமனடி சேர்ந்து ஆண்டுகள் எட்டும் ஆனதே
ஆறவில்லையே எம் துயரம்.

தங்கள் ஆத்மா இறைவனடியில் அமைதி பெற்றிட இறைஞ்சும் உங்கள் குடும்பத்தினர்.

66/02, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (16671)

## இதயத்தின் ஆழத்தில் முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 06 - 07 - 1930

உதிர்வு 24 - 03 - 2002

### அமரர் முதலியார் K.C. நாகமித்திரன்

(ஓய்வுபெற்ற நீதிமன்ற முதலியார்)

திதி: 12.04.2003

அன்பின் சிகரமாய், பண்பின் உறைவிடமாய்,
பாசத்திற்கு இலக்கணமாய் இருந்து எம்மையெல்லாம் வழிநடத்தி
வாழ்ந்து காட்டிய அன்புத் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீராம், கோப்பாய் வீதி, உரும்பிராய். (16560)

தங்கள் பிரிவால் துயருறும்: பிள்ளைகள், மருமக்கள், பேரர்கள், சகோதரன் K.C. ஞானமித்திரன் (U.K.).

## ஓராண்டு நினைவலைகள்



மலர்வு 21 - 07 - 1931

உதிர்வு 24 - 03 - 2002

### திருமதி பாக்கியம் செல்வராசா

திதி: 12.04.2003

ஆண்டொன்று சென்றது அம்மா!!
ஆறவில்லை எம்துயரம் அம்மா!
ஆயிரம் உறவுகள் இருந்து என்ன
அம்மா என்றழைக்க எமக்கு யாருமில்லை
எம்விழி நீர் ஆறவில்லை ஓராண்டு வந்ததுவோ அம்மா!

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

முகவரி: உடுவில் தெற்கு, கந்தர் கோவிலடி, புதுமடம், மானிப்பாய். (16654)

அன்புப் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.


சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
மாபெரும் சிறப்புத் தள்ளுபடி
இணைந்து செய்யும்
ராசி சில்க்ஸ் | நல்லி சில்க்ஸ்
மாபெரும் மலிவு விற்பனை
உண்மை! உண்மை!! உண்மை!!!
ஆனால் நம்பமாட்டீர்கள்.
ஒரு தரம் வந்து பார்த்தால் தெரியும் அதன் உண்மையை.
இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டவை.
சாறிகளில் எத்தனையோ வகை!
70 டிசைன்களுக்கு மேல் (நோமல் முதல் பனாரீஸ் வரை).
☆ பஞ்சாபி ஹிற், சோலி ஹிற் எத்தனையோ டிசைன்களில் எண்ணற்றவை.
☆ சிறுவர்கள் ஆடைகள் பல டிசைன்களில்.
இளையவர் முதல் பெரியவர் வரை
அனைத்து ரக ரெடிமேற் ஆடைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.
ஏப்ரல் - 07 முதல் 14 வரை இக்கழிவு.

ராசி சில்க்ஸ்
70, 71A, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.
T.P. 021 - 222 5571

நல்லி சில்க்ஸ்
121/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021 - 222 5573

(சி-27329)



சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு!
மாபெரும் அதிரடி
மலிவு விற்பனை
பட்டுச்சாறி வகைகள், ஸ்கேட் அன் பிளவுஸ், சல்வார் கமீஸ், கவுண் வகைகள், பேபி கவுண் வகைகள்
சேட், T-சேட், சூட் வகைகள், ஜீன்ஸ், டெனிம் ஜீன்ஸ், காற்சட்டைகள்
5000/-க்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு...
08.04.2003 முதல் 14.04.2003 வரை



மிலேனியம் பெஷன் அன் பொம்பே பஸார் 10, 11, பெரியகடை வீதி, (மலாயன்கபே முன்பாக), யாழ்ப்பாணம்.
(நவீன டிசைன்களை உடனுக்குடன் அறிமுகம் செய்பவர்கள்)
(C/27156)



SALE ★ SALE ★ SALE ★ SALE ★ SALE ★ SALE ★ SALE ★ SALE

## விற்றுத் தீர்த்தல்

இதோ! மாருதி றெக்ஸ் இன் விற்றுத் தீர்த்தல
நடவடிக்கையில் - விற்பனையிலுள்ள விலை விவரம்
அனைத்துப் புடைவைகளும் மாபெரும் மலிவு விலையில்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ★ சூட்டிங் - இங்கிலண்ட் | [illegible] | 300 | ★ செக் பிளவ்ஸ் | [illegible] | 150 |
| ★ சாரம் (No.-1) | [illegible] | 230 | ★ லேடீஸ் T சேட் | [illegible] | 150 |
| ★ வொக்ஸ் சேட் | [illegible] | 400 | ★ ஸ்கேட் | [illegible] | 100 |
| ★ இந்தியன் சேட் | [illegible] | 400 | ★ பஞ்சாபி | [illegible] | 610 |
| ★ இந்தியன் சூட் | [illegible] | 350 | ★ சின்ன பஞ்சாபி | [illegible] | 250 |
| ★ சின்ன சேட் | [illegible] | 250 | ★ சின்ன கவுண் (இந்தியன்) | [illegible] | 350 |
| ★ சின்ன T சேட் | [illegible] | 250 | ★ பேபி புறொக் | [illegible] | 250 |
| ★ பினபோம் | [illegible] | 350 | ★ சாறி | [illegible] | 150 |
| ★ பெரிய கவுண் | [illegible] | 450 | ★ வேட்டி | [illegible] | 300 |
| ★ பெரிய ஸ்கேட் & பிளவ்ஸ் | [illegible] | 650 | ★ சின்ன ரவுசர் | [illegible] | 200 |
| ★ சின்ன ஸ்கேட் & பிளவ்ஸ் | [illegible] | 400 | ★ பெரிய ரவுசர் (சோக்கோ, டெனிம்) | [illegible] | 400 |
| ★ பிளவ்ஸ் | [illegible] | 350 | ★ பெரிய T சேட் | [illegible] | 100 |
| | | | ★ பெரிய T சேட் | [illegible] | 150 |

உடனே விரையுங்கள், கையிருப்பு சொற்பமே
மாருதி றெக்ஸ் இல.1, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(C/27271)

SALE ★ SALE ★ SALE ★ SALE ★ SALE ★ SALE ★ SALE ★ SALE

# அரியாலை 84ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட சிறப்பிதழ்

## சுபானு வருஷ வருஷப் பிறப்பன்று - 14.04.2003

## தலைவரின் வாழ்த்துச் செய்தி



இயற்கை அழகும் நகர வாழ்வின் இயல்புகளும் பனந்தோப்புகளும் நெற் களனிகளும் தென்னைமரச் சோலைகளும் ஒருங்கே அமைந்த அரியாலையம்பதியில் உள்ளூர் அரசயலிலும் கூட்டுறவுத் துறையிலும் கல்வித் துறையிலும் நிர்வாகத் துறையிலும் சைவ சமய வளர்ச்சியிலும் நீண்டகாலமாகவே தலைமைப் பொறுப்பை வகித்து வந்த எமது மூதாதையர் மேலைத்தேய ஆதிக்கத்தால் எமது சுதேசிய மதம், கலை, கலாசாரம் சிதைந்து போகாமல் சுதேசிய உணர்வை வளர்க்கும் நோக்குடன் உருவாகியதே சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவாகும்.

இவ்விழா எம்மைப் பொறுத்தவரையில் மிகவும் உணர்ச்சி பூர்வமானது. நான் கொழும்பில் பலகாலம் தொழில் நிமித்தம் வாழ்ந்து வந்தபோதிலும் ஒவ்வொரு வருடமும் இப்பெருவிழாவில் பங்கு கொளவதற்காக எமது ஊருக்கு வந்து குதூகலமான நினைவு களை எண்ணிப் பார்ப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கயிறு இழுத்தல், விநோத உடைப்போட்டி, நாடக நிகழ்வுகளில் பலமுறை பங்கேற்ற சம்பவங்கள் இன்னும் பசுமையாகவே உள்ளன. குறிப்பாக சுமார் 20 வருடங்களுக்கு முன் அப்போதைய சுதேசிய திருநாள் கொண்டாட்ட ஏற்பாட்டாளர்களால் தயாரித்த பிரமாண்டமான நாடகத்தில் முகமது கோரியாக நான் தோன்றிய காட்சியைப் பலர் பாராட்டிய சம்பவத்தை எண்ணிப் பார்க்கின்றேன். என்னைப்போல் எத்தனையோ கலைஞர்கள் பங்குகொண்டு தமது கலைத் திறனையும் விளையாட்டுத் திறனையும் வெளிக்காட்ட சுதேசிய திருநாள் கொண்டாட்டம் அரியாலை மக்களுக்கு களம் அமைத்துள்ளது.

காலத்தின் தேவையை உணர்ந்து உலகளாவிய நீரோட்டத்துடன் ஒத்துப்போகும் தன்மையாக எமது சுதேசிய கலை கலாசார மரபுகளுடன் மேலைத்தேய நல்ல பண்புகளையும் காலத்துக்குக் காலம் உள்வாங்கிக் கொண்டு வீறுநடை போடடு வருகின்றோம். வெளிநாடுகளில் வாழும் எம்மவர்கள் இவ் வைபவத்தை தாம் வாழும் நாடுகளில் அனுஷ்டிக்கிறார்கள். அந்த அளவுக்கு எமது வாழ்க்கையில் சுதேசிய திருநாள் கொண்டாட்டம் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

இப்பெருவிழா மூலம் பல்வேறு அம்சங்களை நாம் வெளிக் காட்டி வருகின்றோம். குறிப்பாக அரியாலை மக்களின் ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் பலத்தையும் எடுத்துக்காட்டுகின்ற எழுச்சி நாளாகவும் இவ்வைபவம் அமைகின்றது.

அரியாலை மக்கள் நாடகத் துறைக்கு நான் ஆற்றிய பங்களிப்புக்காக 1998இல் கௌரவித்தமைக்காகவும் இம் முறை தலைவராக தெரிவுசெய்தமைக்காகவும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது புனிதமான இப்பெருவிழா கலாநிதி காலத்துக்கு எவ்வித தடங்கலும் இன்றி வளர்ந்தெடுக்க எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டும் என இறைவனை இறைஞ்சி இவ்விழா சிறக்கவேண்டும் என மனதார வாழ்த்துகிறேன்.

ஆ.தேவராசா,
தலைவர்,
84ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழா.

### கௌரவிக்கப்படுவோர் விவரம்

1. கலைத்துறை - திரு. ச.சதாசிவம் (இளைப்பாறிய அதிபர்)
2. கல்வித்துறை - திரு. வி.சுதாகர் (பொறியியலாளர்)
3. பொதுச்சேவை - திரு. க.சண்முகலிங்கம் (J.P.- இளைப்பாறிய அதிபர்)
4. விளையாட்டுத்துறை - செல்வி அ.ராதை (போதனாசிரியர், யாழ். பல்கலைக்கழகம்)

### 12.04.2003 நிகழ்ச்சிநிரல்

தலைவர் : திரு. ஆ.தேவராசா

1. 5மைல் (உள்ளூர்) நீண்ட தூர ஓட்டம் காலை6.30 மணிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் ஆரம்பமாகும்.

கலை நிகழ்ச்சிகள் (மாலை 7.30 மணி)

இடம் : அரியாலை சனசமூக நிலைய காசிப்பிள்ளை அரங்கு.

1. பொதுக்கூட்டமும் பரிசளிப்பும்
2. கலைப் போட்டிகளில் முதலிடம் பெற்றவர்களின் நிகழ்ச்சிகள்.
3. நடனம் : செல்வி அகல்யா சுந்தரம் அவர்களின் மாணவிகள்
4. நாடகம் : கலைஞானகேசரி அரியாலையூர் நடிகமணி வ. செல்வம் குழுவினர் வழங்கும் 'வள்ளி திருமணம்'
5. யாழ்.ரகுமான் புகழ் ஆனந்தாவுடன் A.E.மனோகரன் இணைந்து வழங்கும் 'ஆனந்த ராகங்கள்'

## துணைவேந்தரின் ஆசிச்செய்தி



அரியாலை மக்களால் பாரம்பரியமாகக் கொண்டாடப்படும் அரியாலை 84ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட நிகழ்வுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

அரியாலை மக்களின் முன்னோடிகள் மிகவும் புத்திசாலித்தனமாக தமது கல்வி, கலை, கலாசாரம், விளையாட்டு, சமூக தேவைகளை கருத்தில் கொண்டு அதன் வளர்ச்சிக்கு பல கட்டுமானங்களை ஏற்படுத்தி இருந்தார்கள். அந்தவகையில் இந்த கட்டுமானங்களின் ஒருமித்த எழுச்சியைக் காட்டும் விழாவாக சுதேசிய திருநாள் கொண்டாட்டம் அமைகின்றது.

அரியாலையின் தலைசிறந்த அண்ணாவிமார், நடிகர்கள், நாட்டிய கலையரசிகள், கர்நாடக சங்கீத விற்பன்னர்கள் ஆகியோரை உருவாக்குவதிலும் அரங்கேற்றுவதிலும் சுதேசிய திருநாள் கொண்டாட்ட அமைப்பு காலாகாலமாக ஆற்றிவரும் செயற்கரிய செயற்பாடுகள் போற்றுதற்குரியவை.

அதேசமயம், விளையாட்டு வீரர்களின் சாதனைகளை நிறுவுவதற்கும் கனமாக அமைந்துள்ளது. சுதேசிய விளையாட்டுக்களுடன் உலகளாவிய ரீதியில் வளர்ச்சி பெற்றுவருகின்ற விளையாட்டு நிகழ்வுகளையும், கலை நிகழ்ச்சிகளையும் நடத்தி சர்வதேச நீரோட்டத்தில் அரியாலை மக்கள் பங்குகொள்ள இக் கொண்டாட்டம் வகை செய்கின்றது.

பல்துறை சார்ந்த அறிஞர்களை கௌரவிக்கும் நிகழ்ச்சி இக்கொண்டாட்டத்தின் மற்றுமொரு சிறப்பம்சமாகும். இதை மக்கள் மிக உயர்ந்த விருதாகவும், கௌரவமாகவும் ஏற்றுக் கொள்கின்றார்கள்.

தமிழ் - சிங்கள புதுவருடப் பிறப்பன்று கொண்டாடப்படும் இவ்விழாவில் பங்குகொள்வதற்காக இலங்கையின் பல பாகங்களிலும் தொழில் புரியும் அரியாலைவாசிகள் தமது சொந்த ஊருக்கு வருகை தந்து உறவாடுவது மிகவும் உயர்வு பூர்வமான நிகழ்வாக அமைகின்றது.

பல நெருக்கடிகள் நாட்டில் நிலவியபோதிலும், அரியாலை மக்கள் உணர்வுபூர்வமாக தொடர்ச்சியாக கொண்டாடி வரும் இவ்வழா பன்னெடுங்காலம் நீடித்து வாழவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

சு.மோகனதாஸ்.
துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்.

## அரியாலை 84ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட சிறப்புக் கட்டுரை

ஓர் இனத்தின், அவர்கள் வாழும் பிரதேசத்தின் சிறப்பை அறிய வேண்டுமாயின் அவர்களின் வரலாற்றை அவர்கள் அறிந்திருத்தல் வேண்டும். வளர்ச்சிக்கு வரலாறே அடிப்படையாகும். முதலாம் உலக மகாயுத்தம் உலக வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும். அந்த யுத்த முடிவிலேயே பல சுதேச இயக்கங்கள் விறுவிறுப்படைந்தது. அதன் தாக்கம் அரியாலையிலும் பிரதிபலித்தது. அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் சட்டத்துறையில் வல்லுநர்களாக விளங்கிய அரியாலை ஈன்ற தலைவர்கள் அரசியலிலும் உள்ளூர் நிர்வாகத்திலும் கூட்டுறவுத்துறையிலும் தலைமைப் பதவிகளை வகித்து வந்தனர். அவர்கள் தீர்க்கதரிசனத்தோடு உருவாக்கியதே சுதேசிய திருநாள் கொண்டாட்டமாகும்.

1919ஆம் ஆண்டு பரக்கிராசியர் உயர்திரு ஆ.கதிரவேற்பிள்ளை அவர்கள் தலைமையில் தமிழ்-சிங்கள புதுவருட பிறப்பன்று முதலாவது சுதேசிய திருநாள் கொண்டாட்டம் நடைபெற்றது. சுதேசிய பண்புகளையும் கலை, கலாசார விளையாட்டுக்களையும் பாதுகாத்து அபிவிருத்தி செய்வதை நோக்கமாக கொண்டது. அந்த நோக்கம் காலத்தின் தேவைகளையும் சர்வதேச போக்குகளையும் கருத்தில் கொண்டு வளர்ச்சியடைந்து செல்கின்றது.

84வருடங்களாக எந்தவிதமான நிரந்தர அமைப்போ அரச பதிவோ இல்லாமல் நீண்டதொரு காலமாக தடையின்றி கொண்டாடப்படுவதற்கு அரியாலை மக்களின் மரபுகளும், சம்பிரதாயங்களுமே அடிப்படையாக அமைகின்றது. எங்கிருந்தாலும் ஊரை நேசிப்பார்கள். ஊரின் நலனுக்காக தமது நலனை விட்டுக்கொடுக்கும் மாண்பு அவர்களுக்கே உரிய விழுமியமாகும்.

நகரத்தின் இயல்புகளும் கிராமியபண்புகளும் கொண்ட அரியாலை பேரூர் யாழ்.மாநகரசபை எல்லைக்குள்ளும் நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள்ளும் அமைந்த அழகிய ஊராகும். 13 சனசமூக நிலையங்களையும் கல்விக்கூடங்களையும், கோயில்களையும், கலை, கலாசார மன்றங்களையும் விளையாட்டுக் கழகங்களையும், அபிவிருத்தி மையங்களையும் மாதர் சங்கங்களையும் இன்னும் பலவற்றையும் கொண்ட துடிப்பும் ஒருமையும் மிக்க மக்கள் வாழும் பிரதேசமாகும்.

சுதேசிய திருநாள் கொண்டாட்ட நிகழ்வுகள் எமது இளைஞர்களுக்கு ஒரு பயிற்சிப் பாசறையாகவும் விளங்குகிறது. தங்களுடைய கலா விற்பன்னங்களைக் காட்டவும் விளையாட்டுச் சாதனைகளை நிலைநிறுத்தவும் தளமாக அமைவதோடு, கூட்டு மனப்பாங்கு, மூப்பவர்களை நேசித்தல், அடுத்தவர்களின் திறமைகளை மதித்தல், மனிதகுலத்தின் மாண்புகளை கௌரவித்தல் ஆகிய நல்ல பண்புகளை விழாவின் பல்வேறு செயற்பாடுகளை ஆற்றுகின்றபோது அவர்கள் தாமாகவே பயின்று கொள்கிறார்கள். இதன்மூலம் எமது இளைஞர்கள் சிறந்ததொரு வாழ்க்கையை அமைத்துக்கொள்ள அடிப்படையாக அமைகின்ற எமது சுதேசிய திருநாள் கொண்டாட்டம் தொடர்ச்சியாக எமது இளைஞர்பரம்பரையால் வளர்த்தெடுக்கப்படும்.

ஆ.உபயசேகரம்

### 13.04.2003 நிகழ்ச்சிநிரல்

சைக்கிள் ஓட்டம் 15 மைல் (பொது) காலை 6.30

ஆரம்பிக்கும் இடம் : அரியாலை சனசமூக நிலையம்.

முடிவிடம் : அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம்.

## அரச அதிபரின் வாழ்த்து



அரியாலை, சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழா சபையினர், தனது 84ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் என்ற அடிப்படையிலும், இவ்விழாவினுடைய காப்பாளர் என்ற வகையிலும் எனது ஆசிச் செய்தியை இவ்விழாவின் மலருக்காகத் தருவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

1919ஆம் ஆண்டு தொடக்கம் சுதேசிய மக்களாலும், இலங்கையர்களினாலும் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் அரியாலை மக்களினாலும் தமிழ் மக்களின் புத்தாண்டாகிய சித்திரை வருடப் பிறப்பன்று தமது கலை, கலாசாரப் பண்பாடு என்பவற்றினை வெளிக்கொணர்வதற்காகவும் தமது கொள்கையை நிலைநாட்டிக் கொள்வதற்காகவும் அவர்களினால் தொடர்ந்து கொண்டாடப்பட்டு வரும் விழா சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவாகும். இவ்விழாக் காலத்திலும், அதற்கான கொண்டாட்ட நிகழ்ச்சிகள் நடைபெறும் காலத்திலும், யாழ்.மாநகர சபையின் பெரும்பகுதியை தன்னகத்தே கொண்டுள்ள அரியாலை பிரதேசத்தில் வாழும் மக்களிடையே ஒரு சுறுசுறுப்பையும், குதூகலத்தையும் காணக்கூடியதாக இருக்கும்.

கலை, கலாசார வெளிப்பாடுகள், பல்வேறு விதமான சுதேசிய விளையாட்டுக்கள், மாவட்ட ரீதியிலான விளையாட்டு நிகழ்வுகள் என்பவற்றில் அப்பிரதேசமே கலகலப்பாக இருககும். இது ஒரு வரலாற்று நிகழ்வு. யுத்தங்கள் தொடர்ந்து நடந்தாலும் இவ்வருடாந்த நிகழ்வுகளை தொடர்ந்தும் நடத்துவதில் இம்மக்கள் பின்னிற்பதில்லை. தமது ஒற்றுமையை வெளிக்கொணர்வதிலும் முரண்பாடு இருக்கவில்லை. அவ்வாறான ஒரு கிராமத்தின் பிரதிநிதியாக நான் உருவாகியதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இவ்விழாவில் கடந்த 40 வருடங்களாக பல்வேறு வழிகளில் பங்குபற்றியதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். இப்பொறுப்பை எதிர்காலத்தில் எமது சந்ததியினர் சிறந்த முறையில் செயற்படுவதற்கு எனது பாராட்டுதல்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

செ. பத்மநாதன்,
அரசாங்க அதிபர், யாழ். மாவட்டம்.

### 14.04.2003 திங்கட்கிழமை

(புதுவருடப் பிறப்பன்று)

**விளையாட்டு நிகழ்வுகள் (உள்ளூர்)**

1. தலைமை : திரு ஆ.தேவராசா J.P.
2. பிரதம விருந்தினர் : பேராசிரியர், கலாநிதி சு.மோகனதாஸ் அவர்கள் (துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)
3. இடம் : அரியாலை சனசமூக நிலைய மைதானம்
4. நேரம் : 1.30 மணி விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகும்
5. பொதுக்கூட்டம் : தலைமை உரை<br>பிரதம விருந்தினர் உரை<br>பரிசளிப்பு<br>நன்றியுரை

**இரவு கலை நிகழ்வுகள் (மாலை 7.00மணி)**

1. தலைமை : திரு.ஆ.தேவராசா J.P.
2. பிரதம விருந்தினர்: திரு.செ.பத்மநாதன்
3. இடம் : அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய விசுவநாதன் அரங்கு.
4. நேரம் : மாலை 7.00மணி
5. மங்களவாத்தியம் : அரியாலையூர் இ.யசோதரன் குழுவினர்.
6. பொதுக்கூட்டம் - தலைமை உரை<br>கௌரவிப்பு வைபவம்<br>பிரதம விருந்தினர் உரை
7. நாடகம் - 1. விழாவினரின் பிரமாண்டமான தயாரிப்பு ராணி சம்யுக்தா (சரித்திர நாடகம்) நெறியாள்கை: S.T.கணநாதன்<br>2. விழாவின் நகைச்சுவை பிரிவினர் வழங்கும் அமுக்கவெடி ஆறுமுகம் நெறியாள்கை : அ.சந்திரகுமார்<br>3. பாஷையூர் வளர்பிறை நாடகமன்றம் பெருமையுடன் அளிக்கும் தீர்க்க சுமங்கலி
8. நன்றியுரை: செயலாளர் யோ.முகுந்தன்

(166021)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கண்டாவளை மணல் கலந்து அரிந்த தரமான 'கொங்கிறீட் கட்டிகள்' (கல்) விற்பனைக்குண்டு. தொகையாகவும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.265, பலாலி வீதி, கந்தர்மடம். (16587)

இல.466, நாவலர் வீதி, "Hallo Trust" இற்கு அருகில் 31/4 பரப்பு (தனி அடைப்பு) வெறும் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: E.விக்னேஸ்வரன், இல.16, றக்காலேன், சுண்டுக்குளி. (16676)

ஆங்கில, தமிழ் தட்டச்சுக்கள் ஆங்கில தட்டச்சு, ஒலிம்பியா போட்டபிள் புதிய தமிழ் தட்டச்சு, கோட்றிச் காரியாலயப் பாவனைக்குரியது. இவை விற்பனைக்குண்டு. பொருளை நேரில் பார்த்து விலையைத் தீர்மானிக்கலாம். தொடர்பு: சி.பி.ம.ஆரோக்கிய நாதர்,32/5, அச்சகவீதி, யாழ்ப்பாணம் T.P.: 021 - 222 5173. (16667)

ஒரு வயது நிரம்பிய டாஸ்சௌன (Dash Shoune) கறுப்பு ஆண், பிறவுண் பெண் நாய்க்குட்டிகள் மற்றும் சிங்கர் தையல் மெசின், யமகா ஜெனரேற்றர், 6 அடி அமெரிக்க Disk அன்ரனா என்பனவும் மலிவு விலையில் விற்கப்படும். தொடர்பு: 'பரமபதி' உரும்பிராய் தெற்கு. T.P. 2168. (16656)

## நாய்க்குட்டி விற்பனை

கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்ட சுத்தமான Pedigreed Dobermann pincher நாய்க் குட்டிகள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (16640)

காவலுக்குரிய நல்லஇன அல்ஷேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: டான்போத், டச்சுறோட், உடுவில். (16683)

கறுப்பு நிற அல்ஷேசன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. தடுப்பூசி போடப்பட்டு, பூச்சி நீக்கப் பட்டுள்ளது. தொடர்பு: 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (16681)

சண்டை ஆடும் இரண்டு வயது கடாவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 98, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.(16644)

## ஆங்கில வகுப்புகள்

தரம் 6,7 மாணவர்களுக்கான பாடங்கள் ஆங்கிலத்தில் கற்பிக்கப்படும். G.C.E. A/L 2005 உடன் ஆரம்பம். J.அரியரத்தினம் 16, சோமசுந்தரம் அவெனியூ சுண்டிக்குளி. (16693)

## திருமண சேவை

1942, உத்தராடம், செவ்வாய் 2 சைவவேளாள, பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு பொருத்தமான மணப்பெண் உத்தியோகமாயினும் விண்ணப்பிக்கலாம் மணமக்கள் தேவைக்கு தொடர்பு: துரைவிமலா இலகு திருமணசேவை, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம், T.P. 222 5696. (16487)

## வீடு விற்பனைக்கு

கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தில் வீடு வளவு (1 1/4 பரப்பு) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ.ஜீவா, 264, பிரதான வீதி, (தண்ணீர்தாங்கி அருகில்) யாழ்ப்பாணம். (16586)

## இறைச்சிக்கோழி

புறொயிலர் Kg 120/- சுத்தம் செய்தல் இலவசம் மான்ஸ் பாடசாலை வீதி, டச்றோட், உடுவில். (16333)

Prima Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை) (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (16596)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. 1Kg 125/- பகிரா புறொயிலர் குஞ்சுகள் 15-04-2003 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். றாஜீவ் ஆனைக்கோட்டை சந்தி, T.P.: 3529, 2867. (16665)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (16688)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து பொறுப்பாக வேலை செய்து பிள்ளைகளைப் பராமரிக்கக் கூடிய 45 வயதுக்கு மேற்படாத பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும். No.28, அரசடி வீதி, தட்டாதெரு, யாழ்ப்பாணம். 16659

## தவறிவிட்டது

இம்மானுவேல் யோசேப் லெஸ்லி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (670970256V) நேற்று ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 36/05, ஆசீர்வாதப்பர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். T.P 3649. (16689)

## DEBERMANN PINCHER PUPS

Exelent Purebred Pedigreed Bigboned Dobermann Pincher Pups form our Andigama kennels Colombo arailable For Sale Thanapalsingam 19, Murugesar Lane (Nallur Viedo Centre Compound) Nallur, Jaffna. (16642)

## வகுப்பறைக்கட்டடம் புனரமைப்பு

மாதகல் சென்.ஜோசவ் மகா வித்தியாலயத்தின் சேதமடைந்த வகுப்பறைக் கட்டடம் ஜி.ரி.இசற் நிறுவனத்தினால் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

இந்த மகாவித்தியாலயத்தில் மாதகல் நுணசை வித்தியாலயமும் இடம்பெயர்ந்து கடந்த பத்து வருடகாலமாக இயங்கி வருவதால், இடநெருக்கடி நிலவிவருவதாகவும் -

கடந்த யுத்தகால அனர்த்தங்களின்போது சேதமடைந்த வகுப்பறை கட்டடமொன்றே புனரமைப்புச் செய்யப் பட்டு வருகின்றது என்றும்- தெரிவிக்கப்பட்டது. (எ-135)

## விநியோக வான் தேவை

யாழ்.குடாநாட்டுக்குள் பொருள்களை விநியோகிப்பதற்கு ஏற்றதான வான் தேவை.

தொடர்பு:

நேரில் தொடர்புகொள்ளவும்.

**A.M.T. TRANSPORT SERVICE**

மருத்திக்குறை வீதி,
இருபாலைச் சந்தி, கோப்பாய். (16603)

## கடை விற்பனைக்கு

வல்வெட்டித்துறை, வேம்படிச் சந்தியில் அமைந்துள்ள பாலகுமார் புத்தகசாலைக் கட்டடம் விற்பனைக்குண்டு.

தொடர்பு:

மு. அச்சுதானந்தன்
புதுவளவு,
வல்வெட்டித்துறை. (16691)

## வேலைத்தளப் பொறியியலாளருக்கான (Site Engineer) விண்ணப்பம்

வடக்கு - கிழக்கு சமூக மீளமைப்பு அபிவிருத்தி (NECORD) திட்ட நிதியின் மூலம் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் கட்டட வேலைகளுக்கு வேலைத்தளப் பொறியியலாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

தகைமை: அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் B.Sc.Eng., Civil பொறியியலாளர் பட்டப்படிப்பில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.

நியமனம்: தற்காலிக நாளாந்த சம்பள அடிப்படையிலானது

சம்பளம்: நாளொன்றிற்கு ரூபா 350.00 உடன் அரசினால் வழங்கப்படும் இதர படிகளும் கொடுக்கப்படும்.

பின்வரும் ஆவணங்களுடன் விண்ணப்பங்கள் 21.04.2003 ஆம் திகதிக்கு முன்பதாக அரசாங்க அதிபர், கச்சேரி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "NECORD பொறியியலாளருக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

01. சுயவிவரக்கோவை
02. கல்விச் சான்றிதழ்களின் பிரதி
03. அனுபவச் சான்றிதழ்களின் பிரதி

செ.பத்மநாதன்,
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்.

(C.27365)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 14 - 02 - 1957    மறைவு 26 - 03 - 1999

### அமரர் கதிரவேலு மகாதேவா

திதி: 12.03.2003

உங்கள் பாசம் கொண்ட நெஞ்சங்கள்
பதைபதைத்து துடிக்குதப்பா
நேசங்கொண்ட உள்ளங்களும்
கண்ணீர் மழை சொரியுதப்பா
நாலாண்டுகள் உருண்டோடினாலும்
நாம் இவ்வுலகில் உள்ளவரை
உங்கள் நினைவு அழியாதப்பா
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உம் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி - சாந்தி.
பாசமிகு பிள்ளைகள் - துஷ்யா, ரம்யா.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய். (16697)

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் இயக்குநர் சி.சுரேஷ்குமார் அவர்களின் அன்புத் தந்தையார்

### நாராயணபிள்ளை சிவசுப்பிரமணியம்

(மணியம் களஞ்சியம் - கொடிகாமம்)

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப பிரார்த்திக்கிறோம்.

*J.T.I. (Computer Devision),*
*இல.7, பலாலி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (சி-27366)

விரிவுரையாளர்கள், மாணவர்கள், ஊழியர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஜொய்சி சாந்தகுமாரன் (பபி)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனில் வசித்தவருமான திருமதி ஜொய்சி சாந்தகுமாரன் 10.04.2003 வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் சாந்தகுமாரனின் அன்பு மனைவியும் டிலா, டெனி ஆகியோரின் பாசமிகு தாயாரும் இம்மனுவேல், காலஞ்சென்ற அக்னெஸ் ஆகியோரின் சிரேஷ்ட புத்திரியும் சின்னத்திரேலின் பெறாமகளும் மரியநாயகம் (ஆசிரியர், புனித கென்றியரசர் கல்லூரி,இளவாலை) அவர்களின் மருமகளும் ஜோர்ஜ், டேபியன், ஆன்லோஜினி யூட், நிறோயினி ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சில்லாலை,*
*பண்டத்தரிப்பு.* (16672)

தகவல்:
நீ.யோ.மரியநாயகம்
(ஆசிரியர்)

### திருமதி வீரலட்சுமி கணபதிப்பிள்ளை

ஆறுகால்மடத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது இந்தியா, கும்மிடிப் பூண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வீரலட்சுமி கணபதிப்பிள்ளை 04.04.2003 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கணபதிப்பிள்ளையின் (பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம்) அன்பு மனைவியாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.04.2003) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் நடைபெறும். அத்தினத்தில் ஆறுகால்மடம், பாடசாலை வீதியிலுள்ள அவரது இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

*பாடசாலை வீதி,*
*ஆறுகால் மடம்,*
*ஆனைக்கோட்டை.* (16690)

தகவல்:
இ.முத்துலிங்கம்
(சகோதரன்)

### திருமதி சக்திதேவி புவனேந்திரா (சாந்தி)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட சக்திதேவி புவனேந்திரா 08.04.2003 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நல்லூரைச் சேர்ந்த சிவராஜா யோகராணியின் அன்பு மகளும் உடுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி லீலாவதியின் அன்பு மருமகளும் புவனேந்திராவின் அன்பு மனைவியும் நிஷாந்தன், நிரோஷன், நிமால், மீரா ஆகியோரின் பாசமிகு தாயாரும் சசி (நல்லூர்), சிறிதரன் (டுபாய்), ஆனந்தி, கிரிதரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அனுஜா, நிகேதன், நதிஷ், ஐஸ்வர்யா ஆகியோரின் அன்புச் சித்தியும் யோகராஜா(கொழும்பு), செல்வராஜா (கனடா), பத்மராணி (பபா) ஆகியோரின் பெறாமகளும் சிவா, சந்திரா, செல்வராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் டென்மார்க்கில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*159A. கோவில் வீதி,*
*நல்லூர்.* (16702)

தகவல்:
சசி
(சகோதரி)